

# 2012

# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# ANNUAL REPORT

සේවා නියුක්තයන්ගේ භාර අරමුදල් මණ්ඩලය
ஊழியர் நம்பிக்கை பெறுப்பு நிதியச் சபை
**EMPLOYEES' TRUST FUND BOARD**

# ஆண்டறிக்கை

# 2012

**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை**
1ஆம் மாடி, தொழிற் செயலகம்
தபால் பெட்டி 807, கொழும்பு 5.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| பணிப்பாளர் சபை | 85 |
| சிரேஷ்ட முகாமைத்துவம் | 87 |
| நோக்கும், குறிக்கோளும், கூட்டிணைந்த பெறுமானங்களும் | 89 |
| பணிப்பாளர் சபை அறிக்கை | 93 |
| கணக்காய்வுக் கமிட்டியின் அறிக்கை 2012 | 103 |
| விரிவான வருமானக் கூற்று | 107 |
| நிதி நிலைமைக் கூற்று | 109 |
| காசுப்பாய்ச்சல்களுக்கான கூற்று | 110 |
| உரிமைப்பங்கு மாற்றங்களுக்கான கூற்று | 111 |
| விரிவான வருமானக் சீற்றிற்கான குறிப்புக்கள் | 112 |
| நிதி நிலைமைக்கான கூற்று | 117 |
| நிதியியல் கூற்றிற்கான குறிப்புக்கள் | 122 |
| கணக்காய்வு நாயகத்தின் அறிக்கை | 139 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பாக சபையின் விளக்கம் | 152 |
| புள்ளிவிபர இணைப்பு | 241 |



# பணிப்பாளர் சபை

2012 ஆம் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு

திரு. கே.எம்.ஏ. கொடவத்த
தலைவர் / பி.நி.அதிகாரி
கௌரவ நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

திரு. ஜீ. திஸ்ஸகுட்டியாரச்சி
செயற்பாட்டுப் பணிப்பாளர்
கௌரவ நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

திரு. பீ. ஏ. எஸ். பண்டித்தரத்ன
பணிப்பாளர்,
கௌரவ நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

திரு. யூ. எஸ். அபேரத்ன
பணிப்பாளர்,
கௌரவ நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

திரு. பீ. ஏ. அபேசேக்கர
பணிப்பாளர்
திறைசேரிப் பிரதிநிதி

திருமதி ஜீ.எல்.டீ. தகநாயக்கா
பணிப்பாளர்
வர்த்தக அமைச்சின் பிரதிநிதி

திரு. சீ.எல்.கே.பீ. ஜயசூரிய
பணிப்பாளர்,
இலங்கை பணிகொள்வோர் கழகத்தின் பிரதிநிதி,

திரு. ரஞ்சித் ஹெட்டியாரச்சி
பணிப்பாளர்
தொழிற்சங்கப் பிரதிநிதி

திருமதி தீபா வீரசூரிய
சபைக் காரியதரிசி



# சிரேஷ்ட முகாமைத்துவம்

## 2012 ஆம் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு

**தலைவர் / பி.நி.அதிகாரி**
திரு. கே. எம். ஏ. கொடவத்த

**செயற்பாட்டு பணிப்பாளர்**
திரு. ஜீ. திஸ்ஸகுட்டிஆரச்சி

**மேலதிக பொது முகாமையாளர்**
திரு. எம். சீ. எச். குணரத்ன

**பிரதிப் பொது முகாமையாளர்கள்**

| | |
|---|---|
| திருமதி. ஆர். என். குணசேகர | (முதலீடுகள்) |
| திரு. ஜே. எம். எஸ். பீ. உடுகம | (சேகரித்தல் மற்றும் பணிகொள்வோர் உறவுகள்) |
| திரு. டப்ளியூ. எஸ். திசாநாயக்க | (அங்கத்தவர் சேவைகள்) |
| திரு. எல.எச். நிஹால் | (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்) |
| திரு. கே.எஸ். வெலிவிட்ட | (உள்ளகக் கணக்காய்வு) |
| திரு. என்.டப்ளியூ. விமலவீர | (நிதி) |

**உதவிப் பொது முகாமையாளர்கள்**

| | |
|---|---|
| திரு. சீ. மல்லிகாரச்சி | (அங்கத்தவர் கணக்குகள்) |
| திரு. எச்.எம். செனெவிரத்ன | (அங்கத்தவர் சேவைகள்) |
| திரு. டப்ளியூ. சூரியஆரச்சி | (வினைப்படுத்தல்) - பிராந்தியம் I |
| திரு. ஏ.ஜே.எம்.எஸ். ஜயசுந்தர | (வினைப்படுத்தல்) - பிராந்தியம் II |
| திரு. எம்.எஸ். திசாநாயக்கா | (வினைப்படுத்தல்.்.சுய தொழில்) |

## எங்களுடைய **தொலை நோக்கு**

நிறுவன ரீதியான திறமையினூடாக அக்கறை கொண்ட சகலருக்கும் செயல் திறனும் இயல் தகுதன்மையும் மிகுந்த முதன்மை நம்பிக்கைப் பொறுப்பாக இருத்தல்.

## எங்களுடைய **குறிக்கோள்**

பரந்துபட்ட நிதி அங்கத்துவ நன்மைகள் மற்றும் தனிச்சிறப்பு வாய்ந்த வாடிக்கையாளர் சேவைகளை வழங்கி மிகுந்த அக்கறையும் விவேகமும் கொண்ட நம்பிக்கைப் பொறுப்பாக இருத்தல்.

## கூட்டிணைந்த **பெறுமானங்கள்**

- ☑ நம்பிக்கை
- ☑ நேர்மையும் மேன்மையும்
- ☑ பொறுப்புடமை
- ☑ குழு உணர்வு
- ☑ வெகுமானமும் நன்மதிப்பும்
- ☑ உபசரணை
- ☑ கடின உழைப்பு
- ☑ பொறுப்பேற்று விடையளித்தல்
- ☑ உருவாக்கும் திறன், நவீனத்துவம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

# பணிப்பாளர் சபையின் அறிக்கை 2012

# பணிப்பாளர் சபையின்
## அறிக்கை 2012

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பணிப்பாளர் சபை, அதன் அனைத்து உறுப்பினர்களுக்கும் பணிகொள்வோருக்கும் 2012ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களையும் முன்வைக்கின்றது.

நிதி, நிதித்திட்டமிடல் அமைச்சின் கீழ் செயலாற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை 1980ம் ஆண்டின் 46ஆவது இலக்க ஊ.ந.நி. சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டு, 1981ம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது அது அனைத்து உறுப்பினர்களுக்கும் பணிகொள்வோருக்குமான 32 வருடகால சேவையைப் பூர்த்தி செய்துள்ளது.

### இவ்வாண்டின் பிரதான அடைவுகள்

2012ம் ஆண்டில், சபை குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும் முக்கியமான அடைவுகளையும் அடையப்பெற்றது. சில அடைவுகள் கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

1. இவ்வாண்டிற்கான பணிகொள்வோரின் மொத்தப் பங்களிப்பான ரூபா 12.75 பில்லியன், கடந்த ஆண்டை விட ரூபா 1.66 பில்லியன் அதிகரிப்பைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

2. 2011ஆம் ஆண்டில் 12.3 பில்லியனாக இருந்து, ரூபா 0.9 பில்லியனால் அதிகரித்துள்ள இவ்வாண்டின் மொத்த முதலீட்டு வருமானம் ரூபா 13.2 பில்லியன்களாகும். மேலும், ஆண்டினிறுதியில் பட்டியலிடப்பட்ட முதலீட்டுப் பெறுமானம் ரூபா 134 பில்லியனிலிருந்து ரூபா 150 பில்லியன் வரை அதிகரித்துள்ளது. இவ்வாண்டில் எல்லை வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு நிலையான வருமான வட்டி வீதங்கள் குறைவடைந்தமையே காரணமாகும்.

3. கடந்த வருடத்தில் ரூபா 11.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில், சபை தேறிய இலாபமாக 12.1 ரூபா பில்லியன் ஈட்டியுள்ளதுடன், இவ்வருட இறுதியில் உறுப்பினர்களுக்கிடையில் ரூபா 13.9 பில்லியன் வட்டியாகவும் பங்கிலாபமாகவும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

4. வருட இறுதியில் நிதியத்தின் தேறிய சொத்துப் பெறுமதி ரூபா 158 பில்லியனையும் மிகைத்துள்ளது.

5. உரிமைப் பங்குகளுக்கான வருமானம் 2011ம் வருடத்தின் 719 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 333 மில்லியன் ரூபாவாக இருந்தது. 2012ஆம் ஆண்டின்போது காணப்பட்ட பங்குச்சந்தையின் தொடர்ச்சியான மந்த நிலைமையே இக்குறைவடைதலுக்கான காரணமாகும்.

6. 2012இல் முதலீட்டு வருமானத்தில் மொத்த வீழ்ச்சி இருந்த போதும், வருட இறுதியில் எமது உறுப்பினர்களுக்கு 2012ஆம் ஆண்டிற்கு வட்டியாகவும் பங்கிலாபமாகவும் 10%ஐ மொத்த வீதமாக வழங்க முடிந்தது. (**வரைபு 1 மற்றும் 2ஐப் பார்க்கவும்**) 2012ஆம் ஆண்டினிறுதியில் வங்கிகளாலும்/நிதி நிறுவனங்களினாலும் தமது வாடிக்கையார்களுக்கு வழங்கும் வீதங்களுடன் ஒப்பிடுகையில், இது ஒரு கவர்ச்சிகரமான வீதமாகும். மேலும் பங்கிலாப சமப்படுத்தும் ஒதுக்கில் ரூபா 01 பில்லியன் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

7. அலுவலர் சம்பளம், எரிபொருள், மின்கட்டணம், நீர்ப் பாவனைக் கட்டணம், தபாற் கட்டணம் போன்ற மீண்டெழும் செலவினங்களில் தொடர்ச்சியான மற்றும் தவிர்க்கமுடியாத அதிகரிப்பு இருந்தமையால், 2011ம் ஆண்டில் 5.6%ஆக இருந்த நிதியத்தின் இயங்கு செலவினங்கள், இவ்வாண்டில் 5.7%ஆக அதிகரித்துள்ளது. (**வரைபு 3ஐப் பார்க்கவும்**)

8. செலுத்தப்படாத பங்களிப்புக்கள், மிகை அறவீடுகள், சட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றில் விசேட கவனஞ் செலுத்திய நிலையில், இவ்வருடத்தில் கிளைக்காரியாலய வலையமைப்பானது தொடர்ந்தும் திறமையாகப் பணிபுரிந்தது. கம்பஹா, கண்டி, மாத்தறை அலுவலகங்களில் கோரல் கொடுப்பனவுகளின் பன்முகப்படுத்தல் வெற்றிகரமாகத் தொடரப்பட்டது.

9. அத்துடன், 2012ம் ஆண்டில் குருணாகலை ஆலுவலகத்தினால் கோரல்கள் முறைவழியாக்கம் மேற்கொள்ளப்பட்டதுடன், 2013ஆம் ஆண்டிலிருந்து இரத்தினபுரி, பதுளை, அநுராதபுரம் ஆகிய அலுவலகங்களில் இச்செயற்பாட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

10. 2010 நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் தாபிக்கப்பட்ட புதிய பிராந்திய நிலையம், நிதியத்தினால் வழங்கப்பட்டுள்ள நலன்கள் தொடர்பாக உறுப்பினர்களை விழிப்பூட்டல் மற்றும் பணிகொள்வோரின் பங்களிப்புக்கள் அதிகரித்தல் ஆகியவற்றுடன், 2012ம் ஆண்டில் நம்பிக்கையூட்டக்கூடிய வளர்ச்சியைக் காட்டியுள்ளது.

11. அனைத்து உறுப்பினர்களினதும் கணக்குகளை இற்றைப்படுத்தல் படிமுறை இவ்வருடம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன், இவ்வருடத்தில் தேங்கிக் கிடந்தவற்றில் 96%வற்றை பூர்த்திசெய்வதில் வெற்றிகண்டது. சிக்கல்மிகுந்த எஞ்சியவை தற்போது தீர்க்கப்படுகின்றன. 2011ம் ஆண்டு வரை அனைத்து செயற்படு உறுப்பினர்களுக்கும் வருடாந்த உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களை (AMS) அனுப்புவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

12. இவ்வருடத்தில் சுயதொழில் உறுப்பினர்களை உள்வாங்குதல் தொடர்பாக தொடர்ந்தும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. சமுர்த்தி வங்கியிலிருந்து கடன் வசதிகளைப் பெற்று சிறிய அளவில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் சுயதொழில் உறுப்பினர்களை உள்வாங்கும் நிகழ்ச்சி, இவ்வருடத்தில் சமுர்த்தி வலையமைப்பினூடாக 30,000 உறுப்பினர்கள் உள்வாங்கப்பட்டு மேம்படுத்தப்பட்டது. மேலும், சமுர்த்தி உறுப்பினர்களுக்கு மேலதிகமாக மொத்தம் 28,000 உறுப்பினர்களைக் கொண்டதாக, பால் பண்ணையாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், நிர்மாணத்துறை தொழினுட்பவியலாளர்கள், கலைஞர்கள், முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் ஆகியோருடன் அதிகமான ஆட்சேர்ப்பிற்காக தொடர்ந்தும் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன.

13. இவ்வாண்டிலும் மனிதவள அபிவிருத்தியில் அதிகரித்த முக்கியத்துவம் வழங்கப்பட்டது. சகல மட்டங்களிலுமுள்ள அலுவலர்களினது திறன்கள், மனப்பாங்குகள், அறிவு ஆகியவற்றை மேம்படுத்தும் பயிற்சித் திட்டங்களை/ கருத்தரங்குகளை/ செயலமர்வுகளை ஏற்படுத்திக் கொடுப்பது மேலும் வலியுறுத்தப்பட்டது. தொழிற்சங்க உறுப்பினர்களுக்கும் உரிய துறைகளில் பயிற்சி பெறும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

14. நிர்வாகத்திற்கும் அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான தொழில் சம்பந்தமான நல்லுறவு இவ்வாண்டில் சிறந்த மட்டத்தில் பேணப்பட்டது. இந்த நல்லுறாவானது, சபையின் சகல செயற்பாடுகளும் தங்கு தடையின்றி செவ்வனே நடைபெற பெரிதும் உதவியது.

2012ஆம் ஆண்டில் சபையின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டன.

## பிரதான செயற்பாடுகள்

### பணிகொள்வோரின் பங்களிப்புக்கள் மற்றும் அங்கத்தவர் நிதி

வருவாய்ப் பிரிவு பணிகொள்வோரின் பங்களிப்புக்களைச் சேகரிப்பதற்கும் அவற்றைத் திறம்பட/ நேரகாலத்துடன் வங்கியிலிடுவதற்கும் பொறுப்பாயுள்ளது. அவ்வாறே, அங்கத்தவர் கணக்குப் பிரிவானது, ஒவ்வோர் அங்கத்தவர் கணக்குகளையும் இற்றைப்படுத்துவதற்கும் வருடாந்த அங்கத்தவர் கணக்குக் கூற்றுக்களை அனுப்பிவைப்பதற்கும் பொறுப்பாக உள்ளது.

நிதியத்துக்கு பங்களிக்கும் பணிகொள்வோர்களுக்கு விரைவான மற்றும் சிறந்த சேவையை வழங்குவதற்கு, பணிகொள்வோர் சிறிய வகையினர் எனவும் பெரிய வகையினர் எனவும் இரு குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர், 15 ஊழியர்களை விட அதிகமானோரைக் கொண்டுள்ள பணிகொள்வோர் பெரிய வகையினர் எனவும் 15 ஊழியர்களை விடக் குறைவாகக் கொண்டுள்ள பணிகொள்வோர் சிறிய வகையினர் எனவும் குறிக்கப்படுகின்றனர்.

இவ்வாண்டில் 3,951 புதிய பணிகொள்வோர்கள் நிதியத்துக்கு பங்களிக்க ஆரம்பித்துள்ளனர். இதன் விளைவாக, 2012ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த பணிகொள்வோரின் எண்ணிக்கை 70,194 ஆக உயர்ந்துள்ளது. அவ்வாறே, தமது ஊழியர் சார்பாக, பணிகொள்வோரிடமிருந்து பெறப்பட்ட மொத்த பங்களிப்புக்கள், 2011இல் ரூபா 11.09 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2012ஆம் ஆண்டில் ரூபா 12.75 பில்லியனாக இருந்தது. (**வரைபு 4ஐப் பார்க்க**). மேலும், அங்கத்தவர் நிதியத்தின் பெறுமதி ரூபா 135.5 பில்லியனிலிருந்து நடப்பாண்டின் இறுதியில் ரூபா 153.6 பில்லியனாக அதிகரித்துள்ளது. (**வரைபு 5ஐப் பார்க்க**)

## உறுப்பினர் நலன் கோரல்கள் மற்றும் நலன்புரி நலன்கள்

கோரல்கள் பிரிவானது, மீளளிப்புக்கள் மற்றும் நலன் கோரல்கள் ஆகியவற்றை ஏற்றுக் கொள்வதற்கும், அதன் அங்கத்தவர்களுக்காக அவ்வாறான கோரல்களை துரிதமாக முறைவழிப்படுத்துவதற்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் பொறுப்பாக உள்ளது.

மேலும், உறுப்பினர் சேவைகள் பிரிவானது, உறுப்பினர்களுக்கு அவர்களது உறுப்புரிமைகள் மற்றும் நிதியத்திலிந்து அவர்கள் பெறக்கூடிய நலன்கள் பற்றி தகவல்களை வழங்குவதில் பொறுப்பாக உள்ளது. அத்துடன், பணிகொள்வோர் தமது ஊழியர் சார்பாக பங்களிப்புக்களை உரிய நேரத்தில் அனுப்பி வைப்பதன் பொறுப்பு தொடர்பாக விழிப்பூட்டலை வழங்குகின்றது. அவ்வாறான பணி, நிறுவனங்கள், தொழிற் சங்கங்கள், தொழில்வாண்மை அமைப்புக்கள் ஆகியவற்றின் வேண்டுகோளுக்கு இணங்க விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதன் மூலமும் பல்வேறு பொதுக்கூட்டங்கள் ஊடாக பொதுமக்களை அறிவூட்டுவதன் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றது.

2012ஆம் ஆண்டில், 146,876 மீளளிப்புக் கோரல்கள் முறைவழியாக்கப்பட்டு முழுத் தொகையாக ரூபா 8.6 பில்லியன் ரூபா கொடுப்பனவு செய்யப்பட்டது. 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 145,788 கோரல்கள் முறைவழியாக்கப்பட்டு கொடுப்பனவு செய்த பெறுமதியானது 7.8 பில்லியன் ரூபாவாகும். இவ்வருடத்தில் கோரல் ஒன்றிற்கான சராசரி கொடுப்பனவுத் தொகை கடந்த வருடத்தின் 53,327 ரூபாவிலிருந்து ரூபா 58,320இற்கு அதிகரித்துள்ளது **(வரைபு 06ஐப் பார்க்க)**. இவ்வருடத்தில் கோரல் கொடுப்பனவுகளின் வெளிப்பாய்வு எல்லை அதிகரிப்பைக் காட்டியுள்ளது. 2012ஆம் ஆண்டில், 3,962 நலன் கோரல்கள் முறைவழியாக்கப்பட்டன மற்றும் முழுத்தொகையாக 134 மில்லியன் ரூபா கொடுப்பனவு செய்யப்பட்டது. 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 4,153 கோரல்கள் முறைவழியாக்கப்பட்டன மற்றும் இதன் பெறுமதியானது 138 மில்லியன் ரூபாவாகும். 2010ஆம் ஆண்டில் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய 5000 உறுப்பினர்களின் பிள்ளைகள் சார்பாக 2012 ஆம் ஆண்டில் மக்கள் வங்கியில் 75 மில்லியன் ரூபா வைப்புச் செய்யப்பட்டது. **(வரைபு 7ஐப் பார்க்க)** அவ்வாறே 2011ஆம் ஆண்டில் கபொத (உயர்தர) பரீட்சையில் சித்தியெய்திய 2000 உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு அவர்களது உயர்கல்வியைத் தொடர்வதற்கு உதவியாக 24 மில்லியன் ரூபா கொடுப்பனவு செய்யப்பட்டது. பரீட்சைத் திணைக்களத்தினால் பெறுபேறுகளை வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2012ஆம் ஆண்டில் கபொத (உயர்தர) பரீட்சையில் சித்தியெய்திய பிள்ளைகளுக்கான பணத்தொகையை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதுடன் அவ்வாண்டில் அதனைச் செலுத்த முடியவில்லை. 2013ஆம் ஆண்டில் கூடிய விரைவில் மேற்படி ஒதுக்கப்பட்ட தொகையைச் செலுத்தி முடிவிப்பதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வீடமைப்புக் கடன் தொகையைப் பெறுவதற்கு 54 உறுப்பினர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் முகமாக வியன வீடமைப்புக் கடன் சார்பாக னேுடீ வங்கிக்கு 2012ஆம் ஆண்டில் 69 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டது.

சபை தமது செயற்படு அங்கத்தவர்களுக்காகச் செயற்படுத்தும் 10 நிதியுதவித் திட்டங்கள் பின்வருமாறு:

1. ஆட்டோமற்றிக் லைப் இன்ஷுவரன்ஸ் நலன்கள் : உச்சளவு ரூபா 50,000
2. இருதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி : உச்சளவு ரூபா 150,000
3. சிறுநீரக மாற்றுச்சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி : உச்சளவு ரூபா 150,000
4. முழுமை மற்றும் நிரந்தர ஊனமுற்றோருக்கான திட்டம் : உச்சளவு ரூபா 200,000
5. கண்பளிங்கு வில்லை சத்திர சிகிச்சைக்கான செலவை மீளளித்தல் : இரு கண்களுக்கும் ரூபா 18,000
6. (ஊ.ந.நிதிய அங்கத்தவர்களின்) சித்தியடைந்த பிள்ளைகளுக்கான 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் திட்டம் - வருடாந்தம் ஒவ்வொருவருக்கும் ரூபா 15,000 வீதம் 7,000 புலமைப் பரிசில்கள்)
7. **“சிரம சுவ ரெக்கவரண”** மருத்துவக் காப்புறுதித் திட்டம்: வருடத்திற்கு ரூபா 25,000- வாழ்நாள் முழுவதற்கும் உச்சளவு ரூபா 50,000
8. **“வியன”** குறைந்த வட்டியுடனான வீடமைப்புக் கடன் திட்டம்
9. நிரந்தரமாக ஊனமுற்றதன் காரணமாக தொழிலை விடவேண்டிய நிலையேற்பட்ட நுவுகு உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கான 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் திட்டம்
10. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய உறுப்பினர்களின் க.பொ.த. உயர்தரத்தில் சித்திபெற்ற பிள்ளைகளுக்கு நிதியுதவி – வருடாந்தம் ஒருவருக்கு ரூபா 12,000 வீதம் 5,000 புலமைப் பரிசில்கள்)

➢ **2012 டிசம்பர் மாதம் முதல், உடனடியாகப் பணம் தேவைப்படும் உறுப்பினர்களின் வசதிக்காக, காலையில் விண்ணப்பப்பத்திரத்தைக் கொடுத்தால் அன்றைய நாள் முடிவடைவதற்குள் தமது காசோலையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் கோரல் பிரிவில் விசேட துரித கோரல்கள் கூறு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.**

## அங்கத்தவர் கணக்குகளைப் பேணுதல்

உறுப்பினர் கணக்குப் பிரிவு தனிநபர் அங்கத்தவர் கணக்குகளை இற்றைப்படுத்தல் மற்றும் வருடாந்த அங்கத்தவர் கணக்குக் கூற்றுக்களை அனுப்புதல் ஆகியவற்றுக்கு பொறுப்பாயுள்ளது. வருட இறுதியில், நிதியத்துக்கு பங்களிக்கும் செயற்படு மற்றும் செயற்பாடற்ற அங்கத்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஏறக்குறைய 10 மில்லியனை எட்டியுள்ளது. நிதியம் அனைத்து செயற்படு மற்றும் செயற்பாடற்ற அங்கத்தவர் கணக்குகளைப் பேணி வருகின்றது.

2012.12.31ஆம் திகதியன்று 9,666,352 அங்கத்தவர் கணக்குகள் 2011 ஆம் ஆண்டு வரை இற்றைப்படுத்தப்பட்டன. இது மதிப்பிடப்பட்ட மொத்த அங்கத்தவர் கணக்குகளில் ஏறக்குறைய 96% ஆகும். இவற்றுள், 7,641,356 கணக்குகள் செயற்பாடற்றவையாக இருக்கின்ற நிலைமையில், இவ்வருடத்தில் வருடாந்த அங்கத்தவர் கணக்குக் கூற்றுக்கள் உரிய பணிகொள்வோருக்கு அனுப்பப்பட்ட கணக்குகள் 2,024,996 செயற்படு கணக்குகளாகவும் இருக்கின்றன.

## முதலீடுகள்

கடந்த வருடத்தை விட 2012ம் ஆண்டில் 11.94% அதிகரிப்பைக் கொண்டதாக, பட்டியலிடப்பட்ட முதலீடு 134 பில்லியன் ரூபாவிலிருந்து 150 பில்லியன் ரூபா வரையிலான அதிகரிப்பைக் காட்டியுள்ளது.

2012ஆம் ஆண்டில் சபை முதலீட்டுக் கொள்கையின் வழிகாட்டல்களை கடுமையாகக் கடைப்பிடித்து, மூலதனத்தைப் பாதுகாத்துக் கொண்ட அதேவேளை, நியாயமானதொரு வருவாயையும் பெற்றுக் கொண்டது.

பட்டியலிடப்பட்ட முதலீட்டின் பெரும் பகுதியான ரூபா 134 பில்லியன் (90%) அரசாங்கப் பிணைகளில் முதலீடு செய்யப்பட்டது. மேலும், ரூபா 2.99 பில்லியன் (2%) அரச உத்தரவாதமளிக்கப்பட்ட நிலையான வருமானப் பிணைகளிலும் ரூபா 7.3 பில்லியன் (4.9%) உரிமைப் பங்குகளிலும் முதலீடு செய்யப்பட்டன. **(வரைபு 8ஐப் பார்க்க)**

கடந்த வருடத்தில் பெறப்பட்ட 703 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில், சபை பங்குகளை விற்பனை செய்ததில் பங்கிலாபமாகவும் முதலீட்டு வருமானமாகவும் 324 மில்லியன் ரூபாவை இலாபமாக ஈட்டியது. 2012இல் காணப்பட்ட பங்குச்சந்தையின் மந்தநிலையே இக்குறைவிற்கான காரணமாகும்.

முன்பு குறிப்பிட்டுள்ளவாறு, 2011ஆம் ஆண்டின் 12.3 பில்லியன் ரூபாவிற்கு மாறாக 0.9 பில்லியன் ரூபா அதிகமாக 2012ஆம் ஆண்டில் 13.2 பில்லியன் ரூபாவை முதலீட்டு வருமானமாக ஈட்டியது.

வருமான இலக்குகளைப் பேணிக் கொள்வதற்கும் 2013ஆம் ஆண்டினிறுதியில் உறுப்பினர்களுக்கிடையே நியாயமானதொரு பங்கிலாபத்தினை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கும் முதலீடுகளின் மாற்றீட்டு மூலங்களாக வகைப்படுத்தப்பட்ட வர்த்தகப் பத்திரங்களிலும் தொகுதிக்கடன்களிலும் முதலீடு செய்வதற்கு சபை ஆராய்கின்றது. மேலும், மிகவும் கவர்ச்சிகரமான நன்மைகளுக்கு துணைச் சந்தையில் தொகுதிக்கடன்களில் வர்த்தகத்திற்கான சாத்தியக்கூற்றினையும் ஆராய்கின்றது.

ஆவணப் பரிமாற்றல் ஆணைக்குழு (SEC)/ கொழும்பு பங்குப்பரிமாற்றம் (CSE) ஆகியவற்றால் நடாத்தப்படும் பொருத்தமான பாடநெறிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் முதலீட்டு ஆய்வு மற்றும் ஆராய்ச்சியில் இளம் பட்டதாரிகள் சிலரைப் பயிற்றுவிப்பதற்கு கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

2012 ஒக்டோபர் மாதத்தில் பாராளுமன்றத்தில் அரசாங்க நிறுவனங்களுக்கான கமிட்டி (COPE) க்கு ETF வரவழைக்கப்பட்டு அதன் அனைத்து நடவடிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டன. COPE உறுப்பினர்கள் ETFஇன் முதலீட்டுக் கொள்கை மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான வகைதுறை குறித்து தெளிவு பெற்றனர்.

சபையிலுள்ள திறைச்சேரி பிரதிநிதியின் தலைமையின் கீழுள்ள முதலீட்டுக் கமிட்டி முதலீட்டுச் செயல் திட்டங்கள் மற்றும் விருப்பத்தேர்வுகளையும் மதிப்பிடுவதற்கு தொடர்ந்து ஒன்றுகூடியதுடன் பணிப்பாளர் சபைக்கு சிபாரிசுகளை முன்வைத்தது.

## சேகரித்தல் மற்றும் பணிகொள்வோர் உறவுகள்

பங்களிப்புக்கள், மிகைக்கட்டணங்களின் சேகரித்தல் மற்றும் பிராந்திய அலுவலக வலையமைப்பின் சட்ட, வினைப்படுத்துகை செயற்பாடுகள் ஆகியவை மற்றும் நிர்வாகமும் கண்காணிப்பும் இப்பிரிவினால் கையாளப்படுகின்றன. பணிகொள்வோரினால் செலுத்தப்படும் மாதாந்த பங்களிப்புத் தொகைகளை/ மிகைக் கட்டணங்களை மேம்படுத்துவதற்கும், விஷேடமாகக் கஷ்டப் பிரதேசங்களிலுள்ள ஊ.ந.நி. அங்கத்தவர்களுக்கு சேவைகளை வழங்குவதற்கும் ஊ.ந.நி. சபை பல ஊக்குவிப்புக்களை மீளாய்வாண்டில் மேற்கொண்டுள்ளது.

முன்னர் குறிப்பிட்டுள்ளவாறு, வடமாகாண பணிகொள்வோரினதும் அங்கத்தவர்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு 2010ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்ட புதிய பிராந்திய நிலையம் சிறப்பாகச் செயற்படுகின்றது. இதனுடன் மொத்தம் பிராந்திய நிலையங்களின் எண்ணிக்கை 17ஆக

அதிகரித்துள்ளது. இப்பிராந்திய நிலையங்களின் செயற்பாடுகளை பலப்படுவதற்கு, முகாமை திறன்மிக்க பட்டதாரிப் பயிலுனர்களைத் தயார்படுத்துவதில் தொடர்ந்தும் ஈடுபட்டது.

பணிகொள்வோர் தமது மாதாந்த கட்டணங்களை செலுத்துவதற்கு இலங்கை வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி ஊடாக மின்னனுசார் கொடுப்பனவு முறையைப் பயன்படுத்தும் திட்டத்தை சபை 2012ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது. மிகப் பரந்தளவில் காகித வேலைகளைக் குறைத்துள்ள இது மிகவும் வசதியான ஒரு முறையாக இருப்பதால், 2012இல் அதிகமான பணிகொள்வோர் இந்த முறையைக் கையாண்டு பங்களிப்புக் கொடுப்பனவுகளை மேற்கொண்டுள்ளனர் என்பதை நாம் கவனித்தோம். மேலும், இன்னும் அதிகமான பணிகொள்வோர் இத்திட்டத்தைப் பயன்படுத்துவதை ஊக்கமூட்டும் வகையில் பல்வேறு கருத்தரங்குகளில் விழிப்பூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துவதில் சபை தொடர்ந்தும் முயற்சியில் ஈடுபடுகின்றது. தற்போது ஏறக்குறைய 350 பணிகொள்வோர் தமது பங்களிப்புக்களை இணையத்தளத்தினூடாகச் செலுத்துகின்றனர். மேலும், சம்பத் வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றுடன் 2013ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தை அவ்வங்கிகளூடாகச் செயற்படுத்துவதற்கான கலந்துரையாடல்கள் முடிவுற்றுள்ளன.

பின்வரும் அட்டவணையில் காட்டியுள்ளவாறு வருடம் முழுதும் இப்பிரிவின் செயற்பாடு மிகவும் ஊக்கமளிப்பதாக அமைந்தது.

| | | 2012 | 2011 |
|---|---|---|---|
| ➢ | பரிசோதிக்கப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை | 34,182 | 29,526 |
| ➢ | கண்டுபிடிக்கப்பட்ட தவறிழைத்தோர் எண்ணிக்கை | 22,788 | 19,692 |
| ➢ | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2,196 | 1,991 |
| ➢ | வினைப்படுத்துகை மூலம் அறவிடப்பட்ட பங்களிப்புத் தொகை | 445 மி.ரூ | 500 மி.ரூ |
| ➢ | அறவிடப்பட்ட மிகைக் கட்டணங்கள் | 206 மி.ரூ | 184.9 மி.ரூ |
| ➢ | சட்ட நடவடிக்கைகள் மூலமான வருமானம் | 87 மி.ரூ | 64.3 மி.ரூ |

**(வரைபு 9 - 10 ஐப் பார்க்க)**

2013ஆம் ஆண்டில் இசைவு விகிதத்தினை அதிகரிப்பதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வதற்கு அனைத்து பிராந்திய அலுவலகங்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இவ்வாண்டில் அனைத்து பிராந்திய முகாமையாளர்களுடனும் காலாண்டு தோறும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## நிர்வாகம்'மனித வளங்கள்

இம்மீளாய்வாண்டின் போது சபையின் பல்வேறு பிரிவுகளுக்கு 22 புதிய அலுவலர்கள் உள்வாங்கப்பட்டதுடன், 17 அலுவலர்கள் ஓய்வு பெறல், பதவி விலகல், தொழில் முடிவு போன்ற காரணங்களால் சபையின் சேவையை விட்டும் நீங்கியுள்ளனர். மேற்கூறியவைக்கு மேலதிகமாக, 94 அலுவலர்கள் பதவி உயர்வு பெற்றுள்ளனர். வருட இறுதியில் சபையின் மொத்த அலுவலர்களின் எண்ணிக்கை 913ஐ அடைந்தது.

இவ்வாண்டில் சபை அடையப்பெற்ற குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு பெரிதும் பங்களித்த, கடந்த ஆண்டைப் போன்று, மீளாய்வாண்டின் போதும் தத்தமது உற்பத்தித்திறன், செயல்திறன், மனப்பாங்கு ஆகியவற்றை விருத்தி செய்வதற்கு அனைத்து மட்டங்களிலுமுள்ள அலுவலர்களுக்கு அவரவருக்குரிய துறைகளில் பயிற்சி வாய்ப்புக்கள் சபையினால் வழங்கப்பட்டன. தகவல் தொழில் நுட்பப் பிரிவின் பணிக்குழாத்தினருக்கு பயிற்சி வழங்குவதில் விசேட கவனஞ் செலுத்தப்பட்டதுடன், மொழித்திறன்களை விருத்தி செய்வதற்கும் அதற்குச் சமமாக வலியுறுத்தப்பட்டது. சிரேஷ்ட முகாமைத்துவப் பதவியணியினரும் தமது ஆற்றல்களை மேம்படுத்துவதற்கு உரிய பயிற்சி நிகழ்ச்சிகளில் உட்படுத்தப்பட்டனர்.

## நிதி

தாபனத்தின் சகல நிதிச் செயற்பாடுகளுக்கும் நிதிப் பிரிவு பொறுப்பாக உள்ளது.

சபையின் எல்லா வருவாய்களையும் செலவீடுகளையும் கண்காணித்தல் மற்றும் பதிவுசெய்தல், அனைத்து அலுவலர் குழாத்தினதும் வழங்குநர்களினதும் கொடுப்பனவுகள், மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகள், தேர்ச்சி அறிக்கைகள், வருடாந்த பாதீடு, வருடாந்த பங்கிலாபத் தீர்மானங்கள், ஏனைய முகாமைத்துவ தகவல்கள் ஆகியவற்றைத் தயாரித்தல் என்பன தொடர்ந்தும் இப்பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றன.

இவற்றுக்கு மேலாக, சபையின் கூட்டுத் திட்டம், சமநிலை குறிப்பு அட்டை, செயன்முறைத் திட்டம், வருடாந்த அறிக்கை, கணக்காய்வு விசாரணைகளின் அவதானிப்புக்கள், வெளிவாரி முகவர்களுக்கு நிதி சம்பந்தமான அறிவிப்புக்கள், ஏனைய நிதி ஆவணங்கள் என்பனவற்றை ஒருங்கிணைத்தலும் தயாரித்தலும் இப்பிரிவால் கையாளப்படுகின்றன.

இதற்கு மேலும், சிறப்பான நிதி முகாமைத்துவத்திற்காக 2012ஆம் ஆண்டிலிருந்து வழங்கல் முகாமைத்துவச் செயற்பாடுகளை நிதிப் பிரிவின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி வழங்கல் மற்றும் களஞ்சியப்படுத்தல் முகாமை மற்றும் விலைமனு கோரல் பிரிவுச் செயற்பாடுகள் ஆகியவை நிதிப்பிரிவினால் 2012ஆம் ஆண்டு முதல் கையாளப்பட்டன.

நிதிப்பிரிவானது முதன்முறையாக இலங்கை நிதிசார் அறிக்கையிடுதல் நியமங்களுக்கமைய (SLFRS) 2012ஆம் ஆண்டிற்கான வருடாந்த கணக்குகளைத் தயாரிப்பதில் வெற்றி கண்டது.

## உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மேம்படுத்தப்பட்ட நிதி மற்றும் செயற்பாட்டுத் துறைக்கு இட்டுச் செல்லும் ஒத்துழைப்பை உறுதி செய்யும் அதே வேளை, சபைச் செயற்பாடுகளின் உள்ளகக் கட்டுப்பாடுகளைப் பேணுவதில் பொறுப்பாக உள்ளது. கணக்காய்வு பிரிவுடன் ஒருங்கிணைந்த கணக்காய்வு கமிட்டி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, சிரேஷ்ட பட்டயக் கணக்காளரான சபைத் தலைவரின் கீழ் ஒன்று கூடி, செயல்முறைத்திட்டங்களில் உள்ள குறைபாடுகளைக் கலந்துரையாடியதுடன் செம்மைப்படுத்தும் செயற்பாடுகளைக் கண்காணித்தது. மேலும், நிதியத்தின் வெளிச்செல் நிதியில் குறிப்பிடத்தக்களவு வீதத்தைக் கொண்டுள்ள அங்கத்தவர்களுக்கு வழங்கும் கோரல்கள்.ஃநலன்களைக் கண்காணிப்பதில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு முக்கியமான கவனத்தைச் செலுத்தியது. மேலும், 2012ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுக் குழு தெரிவுசெய்யப்பட்ட பிராந்திய அலுவலகங்களுக்குச் சென்று அவற்றின் பிரதான செயற்பாடுகளைப் பற்றிய அறிக்கையிட்டுள்ளது. அத்துடன், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மென்பொருள் கூறுகளை மாற்றியமைப்பதற்கு, குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக கணக்காய்வு கோணத்தில் தகவல் தொழில் நுட்ப பிரிவிற்கு அறிவுரைகளை வழங்குவதில் பெரும் பங்கை வகித்தது. மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியது. இப்பிரிவினால் விசேட விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டன.

## தொழில் நுட்பம்

அங்கத்தவர் நிர்வாக மென்பொருள் முறைமை (MASS) தொடர்பான பல முக்கியமான பிரச்சினைகள் உள்ளக விருத்தி செய்வோர்களாலேயே தீர்க்கப்பட்டன. இவ்விதத்தில் செயற்பட்டதன் மூலம், வெளிவாரி வர்த்தகர்களை வரவழைத்து செய்விப்பதால் ஏற்படும் கணிசமான செலவுகள் சபையால் தவிர்க்கப்பட்டன.

பிரதான கணினித் தொகுதிக்கு பிரவேசிக்க முடியும் விதத்தில் IPVPN (இணையத்தள மெய்நிகர் செம்மை நடப்பு வழக்கு தனியார் வலையமைப்பு) தொழினுட்ப முறை வழங்கப்பட்ட கம்பஹா, கண்டி, மாத்தறை ஆகிய பிராந்திய அலுவலகங்களில் கோரல்களைச் செலுத்துதல் தொடர்ந்தும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

தகவல் தொழில் நுட்பப் பிரிவினால் தரவு நிரற்படுத்துதலில் ஏற்பட்ட தேக்கத்தை நீக்குதல் மற்றும் வருடாந்த அங்கத்தவர் கணக்குக் கூற்றுக்களைத் தயாரித்தல் போன்றவற்றிற்கு தேவையான தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

பணிகொள்வோர் ஊழியர் நம்பிக்கை நிதிய கொடுப்பனவுகளை இலங்கை வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி மூலம் இணையத்தினூடாகச் செலுத்துவதற்கான வசதிகள், படிப்படியாக அதிகமான பணிகொள்வோர் ஊழியர் நம்பிக்கை நிதிய கொடுப்பனவுகளை செலுத்துவதற்குப் பயன்படுத்தும் முகமாக வலுப்படுத்தப்பபட்டன. அத்துடன், பெரிய வகை பணிகொள்வோர் தமது 'படிவம் II' விபரங்களை காந்த ஊடகங்களுக்கூடாக அனுப்பியமை அவதானிக்கப்பட்டது.

ஊ.ந.நிதிய அங்கத்தவர்களுக்கு தமது அங்கத்தவர் கணக்கு நிலுவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் கொழும்பிற்குள்ளும் வெளியேயும் உள்ள பல காட்சி நிலையங்களில் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் தகவல் தொழில் நுட்பப் பிரிவினால் வழங்கப்பட்டுள்ளன. மேலும், சபையின் பிரிவுகளுக்கும் ஏனைய பிராந்திய அலுவலகங்களுக்கும் இடையில் செயற்பாடுகளை எளிதாக்கும் பொருட்டு, இணையவசதி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய வலைகடப்பிடம் புதுப்புதுத் தகவல்களைத் தொடரறா முறையில் பெற்றுக் கொள்வதற்கு தொடர்ந்து இற்றைப்படுத்தப்படுகின்றது. மேலும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறந்த செய்முறைகளைக்கு இணைவாக இருப்பதற்கும் தொடரறா முறையில் வசதிகளை வழங்குவதற்கும் எமது முறைமைகளையும் தொழில் நுட்பத்தையும் மேம்படுத்துவதற்கு சபை தொடர்ந்தும் செயலாற்றுகின்றது.

மேலும், தகவல் தொழில் நுட்பம் தொடர்பான விடயங்களில் ஆலோசனைகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் அரசாங்க தகவல் தொழில் நுட்ப முகவரான ICTA யுடன் தொடர்ச்சியான தொடர்பு பேணப்பட்டது.

## ஊ.ந.நி.சபைச் சட்டத் திருத்தம்

1993ஆம் ஆண்டு முதல் ஊ.ந.நி சபைச் சட்டம் திருத்தப்படவில்லை. நடப்பிலுள்ள தேவைகளுக்கும் அபிவிருத்திகளுக்கும் இணைவாகச் செல்வதற்கு குறிப்பிட்ட சில திருத்தங்கள் சட்டத்தில் செய்யப்படுதல் அவசியம் என முகாமை தீர்மானித்தது. இதனால், 2011ஆம் ஆண்டு ஆரம்ப காலப்பகுதியில் சபை உறுப்பினர்களைக் கொண்ட விசேட உப கமிட்டி ஒன்றும் சிரேஷ்ட அதிகாரிகளும் சட்டத்திற்கு அவசியமான திருத்தங்களை ஆராய்ந்து பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைகளை முன்வைத்தனர். பின்னர், உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்டு நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டன. அதேசமயம், ஆய்விற்கும் கருத்துக்கதைத் தெரிவிப்பதற்கும் இத்திருத்தங்கள் தேசிய தொழிலாளர் ஆலோசகக் கமிட்டிக்கும் (NLAC) அனுப்பி வைக்கப்பட்டன. இக்கருத்துக்கள் NLACஇல் முடிவுக்குக் கொண்டுவரப்படுகின்றன. அதன் பின்னர், நிதி,திட்டமிடல் அமைச்சு மற்றும் சட்ட வரைவாளர் ஆகியோருக்கு மேல் விதிமுறைகளுக்காக அனுப்பி வைக்கப்படும். இத்திருத்தங்களை 2013 நடுப்பகுதியில் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு இயலும் என நாம் எதிர்பாரக்கின்றோம்.

## ஊ.ந.நி.சபையின் தலைமை அலுவலகத்திற்கான கட்டடம்

ஆரம்பகால முதல், ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் தலைமைக் காரியாலயம் வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டடங்களிலேயே அமைந்தது. தற்போது தலைமைக் காரியாலயத்தின் சில பிரிவுகள் நாவலை வீதி மற்றும் கிருள வீதி ஆகிய இடங்களில் உள்ள வாடகைக்கு எடுக்கப்பட்ட ஐந்து கட்டடங்களில் பரந்துள்ளன. சீரான முகாமைத்துவத்திற்கு தலைமைக் காரியாலயத்தின் அனைத்து பிரிவுகளையும் ஒரே கூரையின் கீழ் அமைப்பது ஊ.ந.நி.சபையின் நெடுங்காலத் தேவையாகும்.

2009ஆம் ஆண்டில், நாரஹேன்பிட்டியிலுள்ள தொழிலாளர் செயலகத்திற்கு சொந்தமான நிலத்தில் ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஏனைய சமூக பாதுகாப்புச் சேவைகள் தொடர்பான

காரியாலயங்கள் ஆகியவற்றுக்கான புதிய அலுவலகத் தொகுதி ஒன்றைக் கட்டுவதற்கு அமைச்சரவு தீர்மானித்தது. 2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. தொழிலாளர் அமைச்சு இக்கட்டடப் பணிகளுக்கு பொறுப்பாக உள்ளது. ஊ.ந.நி. சபைக்கு 14 மாடிகள் ஒதுக்கப்படும் என இணங்கப்பட்டது. தற்போது கட்டுமானப் பணிகளுக்கான பதிகால்களைப் பதிக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதுடன், துரதிர்ஷ்டவசமாக கட்டடப் பணிகளுக்கான பிரதான ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. பிரதான கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் 2013 இல் ஆரம்பிக்கப்பட்டு 2016ஆம் ஆண்டில் முடிவு பெறும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ஊ.ந.நி. சபை தொழிலாளர் அமைச்சுடன் கட்டடத் தொகுதி சட்டத்தின் கீழ் தமது இடத்தின் உரிமைக்கான ஒப்பந்தமொன்றை செய்துகொள்ளும். ஊ.ந.நி. சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்துக்கான கொடுப்பனவை தேவையான அனுமதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், ஊ.ந.நி. சபை செலுத்தும்.

## விசேட செயற்றிட்டங்கள்

1. 2011ஆம் ஆண்டு ஆரம்ப காலத்தில், அனுராதபுரத்தில் சபைக்குச் சொந்தமான நிலத்தில் ஊ.ந.நி உறுப்பினர்களின் பாவனைக்காக உல்லாச பங்களா ஒன்றும் விடுதி ஒன்றும் கட்டுவதற்கு முகாமை தீர்மானித்தது. இரு கட்டுமானப் பணிகளும் 2011 ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பித்து 2012 டிசம்பர் மாதத்தில் பூரணப்படுத்தப்பட்டது. நிலவமைப்பை ஒழுங்குபடுத்தல் மற்றும் கடைசி மெருகூட்டல்களும் நடைபெறுகின்றன. அவ்வளவினுள் ஒரு பக்கத்தில் உள்ள பழைய அலுவலகக் கட்டடத்தை இடித்து விட்டு ஒரு புதிய அலுவலத்தைக் கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2. நலன்புரி வழிவகையாக ஊ.ந.நி. அலுவலர்களினதும் அவர்களது குடும்பத்தினதும் பாவனைக்கு 2012ஆம் ஆண்டில், ஊ.ந.நி. விளையாட்டுக் கழகமும் பலாட்டுபான யாலவில் ஒரு விடுமுறை இல்லத்தை நிர்மாணித்துள்ளது.

## பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள்

2012ஆம் ஆண்டின் இறுதியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபை பின்வருமாறு:

**திரு. கே.எம்.ஏ. கொடவத்த**
தலைவர் / பி.நி.அதிகாரி
கௌரவ நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. ஜீ. திஸ்ஸகுட்டியாரச்சி**
செயற்பாட்டுப் பணிப்பாளர்
கௌரவ நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. பீ. ஏ. எஸ். பண்டித்தரத்ன**
பணிப்பாளர்,
கௌரவ நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. யூ. எஸ். அபேரத்ன**
பணிப்பாளர்,
கௌரவ நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. பீ. ஏ. அபேசேக்கர**
பணிப்பாளர்
திறைசேரிப் பிரதிநிதி

**திருமதி ஜீ.எல்.டீ. தகநாயக்கா**
பணிப்பாளர்
வர்த்தக அமைச்சின் பிரதிநிதி

**திரு. சீ.எல்.கே.பீ. ஜயசூரிய**
பணிப்பாளர்,
இலங்கை பணிகொள்வோர் கழகத்தின் பிரதிநிதி,

**திரு. ரஞ்சித் ஹெட்டியாரச்சி**
பணிப்பாளர்
தொழிற்சங்கப் பிரதிநிதி

**திருமதி தீபா வீரசூரிய**
சபைக் காரியதரிசி

2012ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபையில் வேறு எவ்வித மாற்றங்களும் இல்லை.

## சிரேஷ்ட முகாமைத்துவம்

2012ஆம் ஆண்டின் இறுதியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகள் பின்வருமாறு வகிக்கப்பட்டன:

**தலைவர் / பி.நி.அதிகாரி**
திரு. கே. எம். ஏ. கொடவத்த

**செயற்பாட்டு பணிப்பாளர்**
திரு. ஜீ. திஸ்ஸகுட்டியாரச்சி

**மேலதிக பொது முகாமையாளர்**
திரு. எம். சீ. எச். குணரத்ன

| **பிரதி பொது முகாமையாளர்கள்** | |
|---|---|
| திருமதி. ஆர். என். குணசேகர | (முதலீடுகள்) |
| திரு. ஜே. எம். எஸ். பீ. உடுகம | (சேகரித்தல் மற்றும் பணிகொள்வோர் உறவுகள்) |
| திரு. டப்ளியூ. எஸ். திசாநாயக்க | (அங்கத்தவர் சேவைகள்) |
| திரு. எல.எச். நிஹால் | (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்) |
| திரு. கே.எஸ். வெலிவிட்ட | (உள்ளகக் கணக்காய்வு) |
| திரு. என்.டப்ளியூ. விமலவீர | (நிதி) |
| **உதவி பொது முகாமையாளர்கள்** | |
| திரு. சீ. மல்லிகாரச்சி | (அங்கத்தவர் கணக்குகள்) |
| திரு. எச்.எம். செனெவிரத்ன | (அங்கத்தவர் சேவைகள்) |
| திரு. டப்ளியூ. சூரியஆரச்சி | (வினைப்படுத்தல்) - பிராந்தியம் I |
| திரு. ஏ.ஜே.எம்.எஸ். ஜயசுந்தர | (வினைப்படுத்தல்) - பிராந்தியம் II |
| திரு. எம்.எஸ். திசாநாயக்கா | (வினைப்படுத்தல்.்.சுய தொழில்) |

## முடிவுரை

கௌரவ நிதி, திட்டமிடல் அமைச்சருமான மாண்பு மிகு ஜனாதிபதி அவர்கள், சிரேஷ்ட அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர், நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர் மற்றும் அவரது அனைத்து அலுவலர்கள் ஆகிய எல்லோராலும் வழங்கப்பட்ட ஆதரவுக்கும் வழிகாட்டலுக்கும் பணிப்பாளர் சபை தமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றது. மேலும், 2012ஆம் ஆண்டில் சகல செயற்பாட்டு நடவடிக்கைகளிலும் குறிப்பிடத்தக்கதொரு முன்னேற்றத்தை அடைய ஓரணியாக நின்று பணிபுரிந்த அனைத்து அலுவலர்க்கும் நாம் மனமுவந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். எந்த ஒரு நிறுவனத்தினதும் வெற்றி அதன் அலுவலர்களின் செயலாற்றலுடன் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளது என்பதில் ஐயமில்லை. எனவே, ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் சுறுசுறுப்பும் மிக்கதொரு ஆளணியினரைக் கொண்டிருப்பதில் நாம் பெருமையடைகின்றோம். தமது இடையறா ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கிய அனைத்து தொழிற்சங்கங்களையும் நாம் பாராட்டுகின்றோம். இவ்வருடத்தில் உறுதியான அடித்தளத்தைக் கட்டியெழுப்புவதில் அனைத்து ஊழியர்களும் காட்டிய அர்ப்பணிப்பு, விசுவாசம், ஈடுபாடு மற்றும் தனது அங்கத்தவர்களுக்காக சேவை செய்வதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியுள்ள அமைப்பு ஆகியவை பாராட்டத் தக்கவையாகும்.

# கணக்காய்வுக் கமிட்டியின் அறிக்கை 2012

கணக்காய்வுக் கமிட்டி 2003ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. பணிப்பாளர் சபையினால் நியமிக்கப் பெற்ற கணக்காய்வுக் கமிட்டி மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற சுயேச்சைப் பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. நிதித் துறையிலும் கணக்காய்விலும் குறிப்பிடத்தக்களவு அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட பட்டயக் கணக்காளரே கணக்காய்வுக் கம்டடியின் தலைவராவார்.

2012ஆம் ஆண்டில் கணக்காய்வுக் கமிட்டி ஐந்து முறை கூடியது. மேலதிக பொது முகாமையாளர், அவை கூட்டுபவராகப் பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு), ஏனைய எல்லா பொது முகாமையாளர்கள், அரசாங்கக் கணக்காய்வின் உத்தியோகத்தர் குழு, சம்பந்தப்பட்ட ஏனைய உத்தியோகத்தர்கள் ஆகியோர் அழைப்பின் பேரில் கூட்டத்திற்கு வருகைத் தந்திருந்தனர்.

கணக்காய்வுக் கமிட்டி நடவடிக்கைகள் வழமையாக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படும்.

கணக்காய்வுக் கமிட்டி வெளியிடப்படும் எல்லா பொருத்தமான சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் என்பன தொடர்ச்சியான மீளாய்வுடன் உடன்படுகின்றன என்பதிலும் இணங்காத சந்தர்ப்பங்களில் சபைக்கு சிபாரிசுகளை வழங்குவதிலும் பணிப்பாளர் சபைக்கு துணைபுரியும். உள்ளகக் கணக்காய்வு கண்டுபிடிப்புக்களையும் ஒட்டு மொத்த சூழல் கட்டுப்பாட்டினை மேம்படுத்துவதற்கான சிபாரிசுகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றத்தினை தொடர்ந்தும் செயற்படுத்துவதற்கும் முகாமையின் பதில் நடவடிக்கையுடனான சிபாரிசுகளையும் கமிட்டி மீளாய்வு செய்தது. போதியளவிலான உள்ளகக் கட்டுப்பாடு முறைமைகளை அறிமுகஞ்செய்தல் மற்றும் அமுல்படுத்தல் மற்றும் அம்முறைமைகளுக்கான தொடர்ச்சியான செம்மையாக்கல்களை ஆலோசனைக் கூறுதல் ஆகியவற்றிலும் கணக்காய்வுக் கமிட்டி துணைபுரிந்தது.

சபையின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலில் சபையால் பின்பற்றப்பட்ட நிதி அறிக்கையிடல் முறைமையில் நம்பிக்கைக் கொள்ளலாம் என்ற நியாயமான உறுதிப்பாட்டினை வழங்குவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் வினைத் திறனைக் கமிட்டி மீளாய்வு செய்தது.

மேலும் கணக்காய்வுக் கமிட்டி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை மீளாய்வு செய்ததுடன், அறிக்கையில் குறித்துக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளைச் சீர்படுத்துவதற்கு அவசியமான சிபாரிசுக்களை சபை முகாமைக்கு வழங்கியது.

*கையெழுத்திட்ட*

**பீ ஏ எஸ் பண்டித்தரத்ன**
தலைவர்
கணக்காய்வுக் கமிட்டி

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

# நிதிக்கூற்றுக்கள் 2012

# விரிவான வருமானக் கூற்று

வருடக் கணக்குகள் டிசம்பர் 31 வரை

| | குறிப்பு | 2012 | 2011 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 4 | 13,324,819,872 | 12,416,540,323 |
| பங்கிலாப வருமானம் | 5 | 208,700,797 | 164,355,257 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் மீதான தேறிய இலாபம் /(நட்டம்) | 6 | (304,378,044) | (280,676,440) |
| ஏனைய வருமானம் | 7 | 258,891,913 | 251,872,364 |
| | | **13,488,034,538** | **12,552,091,505** |
| **செலவுகள்** | | | |
| ஆளணிசார் செலவுகள் | 8.1 | 632,244,346 | 570,882,463 |
| செயற்பாட்டு செலவுகள் | 8.2 | 110,701,557 | 107,613,150 |
| நிதிசார் செலவுகள் | 8.3 | 2,484,779 | 2,774,251 |
| அங்கத்தவர் செலவுகள் | 8.4 | 289,908,491 | 294,181,876 |
| சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு | | 20,877,992 | 20,303,987 |
| நடப்பு ஆண்டில் செலுத்தப்பட்ட வட்டி | | 118,220,400 | 108,106,649 |
| **மொத்த செயற்பாட்டு செலவுகள்** | | **1,174,437,564** | **1,103,862,376** |
| வருமானவரி செலவுகள் | 9 | (165,648,658) | (141,008,314) |
| **வருடத்திற்கான இலாபம்** | | **12,147,948,316** | **11,307,220,814** |
| **ஏனைய விரிவான வருமானங்கள்** | | | |
| சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்தல் மீதான தேறிய இலாபம் / (நட்டம்) | | - | 1,842,000,000 |
| நிதிசார் சொத்துக்களை முதிர்ச்சிக்கு விட்டுவிடல் மீதான தேறிய இலாபம் / (நட்டம்) | | (269,065,066) | 511,084,990 |
| நிதிசார் சொத்துக்கள் விற்பனைக்குள்ள தன்மை மீதான தேறிய இலாபம் / (நட்டம்) | | - | 7,000,000 |
| காப்புறுதி கணிப்பீட்டு சார் தேறிய இலாபம் /(நட்டம்) | | (1,275,517) | 277,391 |
| வருடத்திற்கான ஏனைய விரிவான வருமானங்கள், வருமானவரியின் பின் தேறிய வருமானம் | | **(270,340,584)** | **2,360,362,381** |
| **வருடத்திற்கான மொத்த விரிவான வருமானங்கள், ஒதுக்கங்களுக்கு முன்னரான வரியின் தேறிய வருமானம்** | | **11,877,607,733** | **13,667,583,195** |

**சரியென உறுதிப்படுத்தப்பட்டது,**

**என்.டப்ளியூ. விமலவீர**
பிபொமு (நிதி)

**கே.எம்.ஏ. கொடவத்த**
தலைவர்/பி.நி.அ

**எம்.சீ.எச். குணரத்ன**
மேலதிகப் பொது முகாமையாளர்

# நிதி நிலைமைக் கூற்று

கணக்குகள் டிசம்பர் 31இல் உள்ளபடி

| | குறிப்பு | 2012 | 2011 | 01.01.2011 |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்** | | | | |
| பணமும் பணம் போன்றவையும் | | 414,830,531 | 366,615,131 | 265,992,240 |
| வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்ட நிதிசார் சொத்துக்கள் | 10 | 6,871,631,979 | 6,393,856,348 | 4,765,802,654 |
| நிதிசார் முதலீடுகள் - விற்பனைக்கு இருப்பவை | 11 | 485,834,544 | 485,834,544 | 439,943,500 |
| நிதிசார் முதலீடுகள் - முதிர்ச்சிக்கு விட்டுவிடல் | 12 | 135,407,687,030 | 120,212,461,978 | 106,129,045,597 |
| நிதிசார் முதலீடுகள் - கடன் மற்றும் வருமதிகள் | 13 | 7,234,690,204 | 7,137,288,683 | 7,263,920,182 |
| ஏனைய சொத்துக்கள் | 14 | 4,451,654,278 | 4,322,080,322 | 4,911,487,835 |
| சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் | 15.1 | 188,241,276 | 164,972,841 | 151,745,341 |
| அருவச் சொத்துக்கள் | 15.2 | 717,470 | 1,002,291 | 1,401,501 |
| முதலீட்டு சொத்துக்கள் | 16 | 3,200,000,000 | 3,200,000,000 | 1,358,000,000 |
| **மொத்த சொத்துக்கள்** | | **158,255,287,312** | **142,284,112,140** | **125,287,338,851** |
| **பொறுப்புக்களும் உரிமைகளும்** | | | | |
| நடப்பிலுள்ள வரி பொறுப்புக்கள் | | 109,797,276 | 71,710,608 | 194,499,444 |
| ஏனைய பொறுப்புக்கள் | 17 | 156,894,176 | 301,475,525 | 167,771,087 |
| ஏற்பாடுகள் | 18 | 37,496,585 | 16,066,095 | 14,282,705 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **304,188,037** | **389,252,228** | **376,553,236** |
| **மொத்த உரிமைகள்** | 19 | **157,951,099,275** | **141,894,859,914** | **124,910,785,614** |
| **மொத்தப் பொறுப்புக்களும் உரிமைகளும்** | | **158,255,287,312** | **142,284,112,140** | **125,287,338,851** |

இங்கே தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் என்பன நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதிகளாக உள்ளன.
**சரியென உறுதிப்படுத்தப்பட்டது,**

**என்.டப்ளியூ. விமலவீரநிதி**
பிபொமு (நிதி)

**எம்.சீ.எச். குணரத்ன**
மேலதிகப் பொது முகாமையாளர்

நிதிக் கூற்றுக்கள் சபையின் சார்பாக அனுமதிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது.

**கே.எம்.ஏ. கொடவத்த**
தலைவர்/பி.நி.அ

# காசுப்பாய்ச்சல்களுக்கான கூற்று

வருடக் கணக்குகள் டிசம்பர் 31 வரை

| குறிப்புகள் | 2012 | 2011 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள்** | | |
| இலாபம் மற்றும் நட்டத்தின் மூலம் நியாயமான பெறுமதியில் குறிப்பிடப்பட்ட நிதிக் கருவிகளின் விற்பனையிலிருந்து வருமானம் | 1,029,949,105 | 1,518,180,111 |
| முதிர்ச்சிக்கு விடப்பட்ட நிதிக் கருவிகளின் முதிர்வுகள் | 100,176,683,956 | 94,344,963,816 |
| கடன் மற்றும் கிடைக்க வேண்டிய நிதிக்கருவிகளின் முதிர்வுகள் | 63,715,656 | 121,742,689 |
| இலாபம் மற்றும் நட்டத்தின் மூலம் நியாயமான பெறுமதியில் குறிப்பிடப்பட்ட நிதிக் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவு | (1,854,540,832) | (4,027,741,947) |
| முதிர்ச்சிக்கு விடப்பட்ட நிதிக் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவு | (113,182,588,792) | (107,915,815,208) |
| கடன் மற்றும் கிடைக்க வேண்டிய நிதிக்கருவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வழங்கப்பட்ட கடன் | (60,763,735) | (48,140,191) |
| கிடைத்த வட்டி | 10,778,335,799 | 13,687,335,345 |
| கிடைத்த பங்கிலாபம் | 208,635,789 | 164,355,257 |
| கிடைத்த ஏனைய வருமானம் | 239,975,375 | 241,150,753 |
| செலுத்தப்பட்ட செயற்பாட்டு செலவுகள் | (725,598,731) | (569,400,196) |
| செலுத்தப்பட்ட நிதிச் செலவுகள் | (2,484,779) | (2,659,355) |
| செலுத்தப்பட்ட உறுப்பினர் செலவுகள் | (281,208,655) | (190,584,105) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (1,414,439) | (263,797,150) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்கள்** | **(3,611,304,283)** | **(2,940,410,180)** |
| **முதலீட்டுச் செயற்பாடுகள்** | | |
| சொத்து மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (52,273,935) | (39,428,759) |
| சொத்து மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்து வருமானம் | 2,920,040 | 3,056,019 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட)/இருந்து தேறிய காசுப்பாய்ச்சல்கள்** | **(49,353,895)** | **(36,372,740)** |
| **நிதிசார் செயற்பாடுகள்** | | |
| கிடைக்கப்பெற்ற பங்களிப்புக்கள் | 12,582,954,752 | 10,959,906,153 |
| மீளளிப்புக்கள் | (8,565,217,045) | (7,774,489,115) |
| செலுத்தப்பட்ட வரி | (118,332,167) | (108,305,783) |
| 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் கொடுப்பனவு/மீளளிப்பு | (75,844,266) | (73,374,449) |
| உயர் கல்வி புலமைப் பரிசில் கொடுப்பனவு/மீளளிப்பு | (3,096,000) | (20,064,000) |
| **நிதிசார் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாயச்சல்கள்** | **3,820,465,274** | **2,983,672,806** |
| பணமும் பணத்திற்குச் சமமானவையிலும் தேறிய அதிகரிப்பு | 159,807,096 | 6,889,886 |
| ஜனவரி 01ஆந் திகதியன்று பணமும் பணத்திற்குச் சமமானவையும் | 255,023,435 | 248,133,550 |
| **டிசம்பர் 31ஆந் திகதியன்று பணமும் பணத்திற்குச் சமமானவையும்** | **414,830,531** | **255,023,435** |

# உரிமைப்பங்கு மாற்றங்களுக்கான கூற்று

வருடக் கணக்குகள் டிசம்பர் 31 வரை

| | அங்கத்தவர் நிதி | பங்கிலாப சமப்படுத்தல் ஒதுக்கு | மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | வைத்திருக்கப்படும் வருவாய்கள் | மொத்த உரிமைப்பங்கு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **2011 ஜனவரி 01ஆந் திகதி** | 119,852,873,251 | 4,000,000,000 | 1,313,730,470 | (255,818,107) | 124,910,785,614 |
| முன்னைய ஆண்டு சரிப்படுத்தல்கள் | (1,082,778) | - | - | - | (1,082,778) |
| வருடத்தில் கிடைக்கப்பெற்ற பங்களிப்புக்கள் | 11,092,062,998 | - | - | - | 11,092,062,998 |
| வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மீளளிப்புக்கள் | (7,774,489,115) | - | - | - | (7,774,489,115) |
| அங்கத்தவர் நிதிக்கான வட்டி | 3,695,080,931 | - | - | (3,695,080,931) | - |
| பங்கிலாபம் | 8,621,855,505 | - | - | (8,621,855,505) | - |
| பங்கிலாப சமப்படுத்தல் ஒதுக்கிற்கு மாற்றுதல் | - | (1,000,000,000) | - | - | (1,000,000,000) |
| வருடத்திற்கான சரிப்படுத்தப்பட்ட இலாபம் | - | | | 12,307,220,814 | 12,307,220,814 |
| **ஏனைய விரிவான வருமானங்கள்** | | | | | - |
| சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்தல் மீதான தேறிய இலாபம்/(நட்டம்) | - | - | 1,842,000,000 | - | 1,842,000,000 |
| அலகுகளின் நியாயமான பெறுமதி சரிப்படுத்துகை | - | - | - | - | - |
| விற்பனைக்கு உள்ள நிதி முதலீடுகள் | - | - | - | 7,000,000 | 7,000,000 |
| விற்பனைக்கு உள்ள சொத்துக்கள் மீதான தேறிய இலாபம்/(நட்டம்) | - | - | - | - | - |
| காப்புறுதி இலாபம்/(நட்டம்) | | | | 277,391 | 277,391 |
| நிதிசார் சொத்துக்களை முதிர்ச்சிக்கு விட்டுவிடல் மீதான தேறிய இலாபம் /(நட்டம்) | - | - | - | 511,084,990 | 511,084,990 |
| **2011 டிசம்பர் 31ஆந் திகதி** | **135,486,300,792** | **3,000,000,000** | **3,155,730,470** | **252,828,652** | **141,894,859,913** |
| **2012 ஜனவரி 01ஆந் திகதி** | **135,486,300,792** | **3,000,000,000** | **3,155,730,470** | **252,828,652** | **141,894,859,913** |
| முன்னைய ஆண்டு சரிப்படுத்தல்கள் | (850,297) | - | - | - | **(850,297)** |
மீள்கொள்வனவு ஒப்பந்தத்தில் முதலீடானது நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்ச்சி ஆகியவற்றைக் கொண்டுள்ளதுடன், முதிர்ச்சி முதலீட்டுக்கு விடுவதற்கு முடிவு செய்வதன் மூலமாக முதிர்ச்சிக்கு வைத்திருப்பதற்கான இயலுமை மற்றும் உடன்பாடான எண்ணத்தைச் சபை கொண்டுள்ளது. இது ஆரம்பத்தில கொடுக்கல் வாங்கல் செலவு, ஏதேனும் இருப்பின், உட்பட நியாயமான பெறுமதியில் அளவிடப்படுவதுடன் பிற்பகுதியில் வினைத்திறன் மிக்க வட்டி வீதத்தைப் பயன்படுத்தி கடன் கழிப்புச் செலவில் அளவிடப்படும்.

**நிதிச் சொத்துக்களின் பெறுமதி இழப்பு**

அறிக்கையிடும் ஒவ்வொரு காலப்பகுதியிலும் சபையானது நிதிச்சொத்தொன்றின் அல்லது ஒத்த நிதிச் சொத்துக்களின் தொகுதியின் பெறுமதி இழப்பிற்கு ஏதேனும் தெளிவான ஆதாரம் உள்ளதா என மதிப்பீடு செய்யும். சொத்தின் ஆரம்ப வகைப்படுத்தலின் பின்னர் (நட்ட நிகழ்வு) நடைபெறும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளின் காரணமாக தெளிவான ஆதாரம் இருந்தாலேயே, நிதிச் சொத்தொன்றில் பெறுமதி இழப்பு ஏற்படும் அல்லது பெறுமதி இழப்புக்கு ஆளாகும். மேலும் அந்நட்ட நிகழ்வு (அல்லது நிகழ்வுகள்) நம்பகமான முறையில் மதிப்பிடப்படக் கூடிய நிதிச்சொத்தொன்று அல்லது ஒத்த நிதிச் சொத்துக்களின் தொகுதி ஒன்று மீதான மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் பாதிப்பை ஏற்படுத்தும்.

**கடன் கரைப்புச் செலவு மீதான நிதிச் சொத்துக்கள்**

கடன்கரைப்புச் செலவில் மேற்கொண்டுள்ள நிதிச்சொத்துக்கள் தொடர்பாக (ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் மற்றும் முதிர்ச்சிக்கு விடப்பட்ட முதலீடுகள்), தனித்தனியாக முக்கியமற்ற நிதிச் சொத்துக்களுக்கு கூட்டாக அல்லது தனித்தனியாக முக்கியமான நிதிச் சொத்துக்களில் காணப்படுகின்ற பெறுமதி இழப்பிற்கான நிச்சயமான ஆதாரம் இருக்கின்றதா என தாபனம் முதலில் தனித்தனியாக மதிப்பீடு செய்யும். தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களில் பெறுமதி இழப்பீடு காணப்படுவதற்கான நிச்சயமான ஆதாரம் இல்லையென சபை முடிவு செய்தால், அது சொத்தினை ஒத்த கடன் இடர் பண்புகளைக் கொண்ட நிதிச் சொத்துக்களின் தொகுதியில் உள்ளடக்குவதுடன், பெறுமதி இழப்பீட்டினைக் கூட்டாக மதிப்பீடு செய்யும். தனித்தனியாக பெறுமதி இழப்பீடு மதிப்பீடு செய்யப்பட்ட, மற்றும் பெறுமதி இழப்பு இருக்கக் கூடிய, அல்லது தொடர்ந்தும் இனங்காணக்கூடிய சொத்துக்கள் பெறுமதி இழப்பீட்டிற்கான கூட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட மாட்டாது.

பெறுமதி இழப்பு நட்டம் ஏற்பட்டதற்கான நிச்சயமான ஆதாரம் இருப்பின், நட்டத் தொகையானது (இன்னும் நடைபெற்றிராத எதிர்கால கடன் நட்டங்கள் தவிர்ந்த) சொத்துக்களின் காவுகைத் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் நடப்பிலுள்ள பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாக அளவிடப்படும். நிதிச் சொத்துக்களின் காவுகைத் தொகையானது முற்பணக் கணக்கினைப் பயன்படுத்துவதன் ஊடாகக் கழிக்கப்படுவதுடன், நட்டத் தொகையானது வருமானக் கூற்றில் வகைப்படுத்தப்படும். வட்டி வருமானம் கழிக்கப்பட்ட காவுகைத் தொகையுடன் தொடர்ந்தும் சேர்க்கப்படுவதுடன், பெறுமதி இழப்பு நட்டத்தினை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப்பாய்ச்சல்களைக் கழிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி சேர்க்கப்படும்.

'வட்டி வருமானத்தின்' ஒரு பகுதியாக வட்டி வருமானம் பதிவு செய்யப்படும். கூட்டு முற்பணம் உடனான கடன்கள் எதிர்காலத்தில் மீளப் பெறுவதற்கான உறுதியான நம்பிக்கை இல்லாவிடின் பதிவழிக்கப்படும். தொடரும் ஆண்டில் பெறுமதி இழப்பு இனங்காணப்பட்டதன் பின்னர் ஏற்படும் ஒரு நிகழ்வின் காரணமாக மதிப்பிடப்பட்ட பெறுமதி இழப்பு நட்டம் அதிகரித்தாலோ அல்லது குறைந்தாலோ முற்பணக் கணக்கினை சரிப்படுத்துவதன் மூலம் ஏற்கெனவே இனங்காணப்பட்ட பெறுமதி இழப்பு நட்டம் அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ படும்.

மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் நடப்புப் பெறுமதி நிதிச் சொத்துக்களின் ஆரம்ப நுஜசுஇல் கழிவு செய்யப்படும். கடன் மாறும் வட்டி வீதத்தினைக் கொண்டிருந்தால், எந்தவொரு பெறுமதி இழப்பு நட்டத்தினையும் அளவிடுவதற்கான கழிவு வீதம் நடைமுறை EIR ஆக இருக்கும். எந்தவொரு பெறுமதி இழப்பு நட்டத்தினையும் அளவிடுவதற்கு கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வர்த்தகச் சொத்துக்களைத் தாபனம் மீள வகைப்படுத்தினால் புது EIR மீள வகைப்படுத்தல் தினத்தில் தீர்மானிக்கப்படும்.

**விற்பனைக்குள்ள நிதி முதலீடுகள்**

விற்பனைக்குள்ள நிதி முதலீடுகளை அறிக்கையிடும் ஒவ்வொரு காலப்பகுதியிலும் சபையானது முதலீட்டின் பெறுமதி இழப்பிற்கு ஏதேனும் தெளிவான ஆதாரம் உள்ளதா என மதிப்பீடு செய்யும்.

கடன் சாதனங்களைப் பொறுத்த வரையில் விற்பனைக்குள்ளதாக வகைப்படுத்தப்படும், கடன் கழிப்புச் செலவில் மேற்கொள்ளப்பட்ட நிதிச் சொத்துக்களுக்கு போன்றே ஒரே பிரமாணங்களின் அடிப்படையில் பெறுமதி இழப்பிற்கான நிச்சயமான ஆதாரம் உள்ளதா என தாபனம் தனித்தனியாக மதிப்பீடு செய்யும். எவ்வாறெனினும், பதிவு செய்யப்பட்ட பெறுமதி இழப்புத் தொகையானது, முன்னர் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்ட முதலீடு மீதான ஏதாயினும் பெறுமதி இழப்பு நட்டத்தினைக் கழித்து, நடப்பு நியாயமான பெறுமதிக்கும் கடன் கழிப்புச் செலவினத்திற்கும் இடையிலான வித.

தியாசமாக அளவிடப்பட்ட திரண்ட நட்டமாகும். எதிர்கால வட்டி வருமானம் கழிக்கப்பட்ட காவுகைத் தொகையின் அடிப்படையில் உள்ளதுடன், பெறுமதி இழப்பு நட்டத்தினை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப்பாய்ச்சல்களைக் கழிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி சேர்க்கப்படும். 'வட்டி வருமானத்தின்' ஒரு பகுதியாக வட்டி வருமானம் பதிவு செய்யப்படும். பிற்பகுதியில், கடன் சாதனங்கள் மீதான நியாயமான பெறுமதி அதிகரித்தால் வருமானக் கூற்றில் இனங் காணப்பட்ட பெறுமதி இழப்பு நட்டத்திற்கு பின்னர் ஏற்படும் கடன் நிகழ்வுக்கு நிச்சயமாக தொடர்புற்றதாக இருக்கக்கூடும். வருமானக் கூற்றினூடாக பெறுமதி இழப்பு நட்டம் நீக்கப்படும்.

உரிமைப்பங்கு முதலீட்டினைப் பொறுத்த வரையில், வியாபரத்திற்கு உள்ளதாக வகைப்படுத்தப்படும். முதலீட்டின் நியாயமான பெறுமதியில் அதன் செவினத்தை விடக் கீழாக 'முக்கியமான' அல்லது 'நீண்ட கால' சரிவினை நிச்சயமான ஆதாரம் உள்ளடக்கியிருக்கும். பெறுமதி இழ்ப்பிற்கான ஆதாரம் இருப்பின் திரண்ட நட்டமானது முன்னரே வருமானக் கூற்றில் இனங்காணப்பட்ட முதலீடு மீதான எந்தவொரு பெறுமதி இழப்பு நட்டத்தனையும் கழித்து ஈட்டல் செலவிற்கும் நடப்பு நியாயமான பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாக அளவிடப்படுவதுடன், உரிமைப்பங்கிலிருந்து நீக்கப்பட்டு வருமானக் கூற்றில் இனங்காணப்படும். உரிமைப்பங்கு முதலீடுகள் மீதான பெறுமதி இழப்பு நட்டங்கள் வருமானக் கூற்றினூடாக நீக்கப்பட மாட்டாது, பெறுமதி இழப்பீட்டுக்கு பின்னரான நியாயமான பெறுமதியில் ஏற்படும் அதிகரிப்பு வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

**1.9 சொத்துக்கள், பொறித் தொகுதி, மற்றும் கருவிகள்**

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் உருப்படிகள் ஆரம்பத்தில் செலவில் இனங்காணப்படும். செலவானது கொள்வனவு விலை, நேரடியாக ஈர்க்கக்கூடிய செலவு மற்றும் பிரித்தெடுத்தல் மற்றும் அகற்றும் பொருட்களின் எதிர்கால தவிர்க்கமுடியாத செலவுகளின் மதிப்பிடப்பட்ட நடப்புப் பெறுமதி ஆகியவற்றை உள்ளடக்கும். தொடர்புறும் பொறுப்பு ஏற்பாடுகளுள் இனங்காணப்படும்.

மீள உபயோகத்திற்கு எடுத்தல் அல்லது ஆரம்பத்தில் மதிப்படப்பட்ட செயலாற்றுகை அளவிற்கு எதிர்பார்க்கும் எதிர்கால பொருளாதார நன்மைகளைப் பேணுதல் பொருட்டு, சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகள் மீதான பழுதுபார்த்தல் அல்லது பராமரிப்புச் செலவுகள் நடைபெறும் போது வருமானக் கூற்றில் செலவினமாக இனங்காணப்படும்.

(முதலீட்டுச் சொத்துக்கள்) மெய் ஆதனங்களைத் தவிர ஒடுக்கிய சமப்படுத்தல் முறைமைப் பயன்படுத்தி பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடுகள் கணிக்கப்படும். சொந்த உரிமைக் காணி பெறுமானத் தேய்விற்கு உட்படுவதில்லை. கொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகளின் ஏனைய எல்லா உருப்படிகளும் மீது மீதிப் பெறுமானத்தைக் கழித்து, ஏதும் இருப்பின், அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தினுள் அவற்றின் காவுகைப் பெறுமானத்தை

பதிவழிப்பதற்கு பெறுமானத் தேய்வு வழங்கப்படுகின்றது. சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்தரு பொருளாதார ஆயட்காலம் பின்வருமாறு:

| | |
|---|---|
| கணினி கருவிகள் | 20% |
| ஏனைய கருவிகள் | 20% |
| தளபாடங்கள் | 15% |
| மோட்டார் வாகனங்கள் | 25% |
| பொருத்திகளும் துணைக்கருவிகளும் | 33.33% |

சொத்துக்களின் பெறுமானத் தேய்வு அது பாவனைக்கு கிடைக்கும் போது ஆரம்பிக்கின்றது.

### 1.10 நிதி சாரா சொத்துக்களின் பெறுமதி இழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியிலும் சபை சொத்தொன்று பெறுமதி இழக்கக் கூடிய அறிகுறிகள் உள்ளதா என மதிப்பீடு செய்யும்.ஏதேனும் அறிகுறி இருப்பின், அல்லது ஒரு சொத்திற்க்கான வருடாந்த பெறுமதி இழப்பு பரிசோதனை தேவைப்படும் போது, சொத்தின் மீளப் பெறக் கூடிய தொகையினை சபை கணிப்பீடு செய்யும். சொத்தொன்றின் மீளப் பெறக்கூடிய தொகையானது, விற்பனைச் செலவுகள் மற்றும் பாவனையில் உள்ள அதன் பெறுமதியைக் கழித்து வரும் ஒரு சொத்தின் கூடிய அல்லது CGU இன் நியாயாமான பெறுமதி ஆகும். ஒரு சொத்தின் அல்லது CGU இன் காவுகைத் தொகை அதன் மீளப் பெறக்கூடிய தொகையை விட அதிகரிக்கும் போது கொத்து பெறுமதி இழந்ததாகக் கருதப்படுவதுடன், அதன் மீளப் பெறக் கூடிய தொகையில் பதிவு செய்யப்படும்.

பாவனையில் உள்ள விலை மதிப்பீட்டுப் பெறுமதியில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள், சொத்திற்கான குறிக்கப்பட்ட இடர்கள் மற்றும் பணத்தின் காலப் பெறுமதி மீதான நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கக் கூடிய வரிக்கு முன்பான கழிவு வீதத்தினைப் பயன்படுத்தி அவற்றின் நடப்புப் பெறுமதிக்கு கழிவு செய்யப்படும். விற்பனைச் செலவினங்களைக் கழித்த நியாயமான பெறுமதியினைத் தீர்மானிக்கையில், பொருத்தமான மதிப்பீட்டு மாதிரி ஒன்று பிரயோகிக்கப்படும். இம்மதிப்பீடுகள் பன்மடங்கு மதிப்பீடு மற்றும் பகிரங்கமாக வர்த்தகம் செய்யப்பட்ட கம்பனிகளுக்கான குறிக்கப்பட்ட பங்கு விலைகள் அல்லது ஏனைய கிடைக்கக் கூடிய நியாயமான பெறுமதி குறிகாட்டிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சொத்துக்களுக்கு, முன்னர் இனங்காணப்பட்ட பெறுமதி இழப்பு நட்டங்கள் இனிமேலும் இல்லை அல்லது குறைந்துள்ளது என ஏதேனும் குறிகாட்டி உள்ளதா என ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியிலும் மதிப்பீடு மேற்கொள்ளப்படும். அவ்வாறான குறிகாட்டி காணப்படின், சொத்தின் அல்லது ஊபுரு இன் மீளப் பெறக்கூடிய தொகையினை சபை மதிப்பீடு செய்யும்.இறுதி பெறுமதி இழப்பு நட்டம் இனங்காணப்பட்டதிலிருந்து சொத்தின் மீளப் பெறக்கூடிய தொகையினைத் தீர்மானிப்பற்கு பயன்படுத்திய எடுகோள்களில் மாற்றம் ஏற்பட்டிருந்தாலேயே முன்னர் இனங்காணப்பட்ட பெறுமதி இழப்பு நட்டம் திருப்பப்படும். திருப்புதலானது சொத்தின் காவுகைத் தொகை அதன் மீளப் பெறக்கூடிய தொகையை விட அதிகரிக்கவோ தீர்மானிக்கப்பட்ட காவுகைத் தொகை அதிகரிக்கவோ மாட்டாது என்ற விதத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. தேறிய பெறுமானத் தேய்வு கடந்த வருடங்களில் இனங்காணப்பட்டுள்ள பெறுமதி இழப்பு நட்டத்தினைக் கொண்டதில்லை. அவ்வாறான திருப்புகை வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

### 1.11 முதலீட்டுச் சொத்து

கொடுக்கல் வாங்கல் செலவுகள் உட்பட முதலீட்டுச் சொத்தக்கள் ஆரம்பத்தில் செலவில் அளவிடப்பட்டன. ஆரம்ப இனங்காணலின் பிற்பாடு, அறிக்கையிடும் தினத்தில் சந்தை நிலைமைகளைப் பிரதிபலிக்கும் நியாயமான பெறுமதியில் முதலீட்டுச் சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலீட்டுச் சொத்துக்கள் மீதான நியாயமான விலையில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் காரணமாக எழக்கூடிய இலாபங்கள் மற்றும் நட்டங்கள் அவை ஏற்பட்ட காலப்பிரிவில் வருமானக் கூற்றில் உள்ளடங்குகின்றன.

சபையின் முதலீட்டுச் சொத்து விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ள காவுகைப் பெறுமதியில் உள்ள மாற்றங்களுடன் திறந்த சந்தைப் பெறுமதிக்கு ஒவ்வொரு மூன்று வருடத்திலும் மீள் மதிப்பீடு செய்யப்படும்.

கிடைக்க வேண்டிய வாடகை குத்தகைக்கு விடப்பட்ட காலப்பகுதிக்குள் நேர் கோட்டு முறைமையின் அடிப்படையில் அமைக்கப்படும். வாடகைக் குடியிருப்பாளனுக்கு ஊக்குவிப்பொன்று (வாடகை அறவிடப்படாத காலப்பகுதி போன்ற) வழங்கப்படுகையில், முதலீட்டுச் சொத்தின் காவுகைப் பெறுமதி இவ்வடிப்படையில் வாடகை வருமானமாக இனங்காணப்பட்டதன் விளைவாக பிரத்தியேகமான சொத்தொன்றாக பதியப்பட்ட ஏதேனும் தொகையை நீக்கும்.

## 1.12 அருவச் சொத்துக்கள்

### 1.12.1 வெளிவாரியாகப் பெறப்பட்ட அருவச் சொத்துக்கள்

பிரத்தியேகமாகப் பெறப்பட்ட அருவச் சொத்துக்கள் ஆரம்ப இனங்காணலின் போது செலவில் அளவிடப்பட்டன. அருவச் சொத்துக்கள் மீதான பின்வரும் ஆரம்ப இனங்காணல்கள், திரண்ட கடன் தீர்ப்பனவு மற்றும் மிரண்ட பெறுமதி இழப்பு நட்டங்களைக் கழித்து செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அருவச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வரையறுக்கபட்ட அல்லது வரையறுக்கப்படாத விதத்தில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

அருவச் சொத்துக்கு பெறுமதி இழப்பு ஏற்படக் கூடும் என்ற குறிகாட்டி உள்ள போதெல்லாம், வரையறைக்குள்ளான ஆயுட்காலத்தை கொண்ட அருவச் சொத்துக்கள் அவற்றின் பயன்தரு பொருளாதார ஆயுட்கலத்தினுள் கடன் தீர்ப்பனவு செய்யப்படுவதுடன், பெறுமதி இழப்புக்காக மதிப்பீடு செய்யப்படும். வரையறைக்குள்ளான பயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்திற்கான கடன் தீர்ப்பனவு காலம் மற்றும் கடன் தீர்ப்பனவு முறைமை குறைந்தபட்சம் ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் மீளாய்வு செய்யப்படும். எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது சொத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளின் கொள்வனவின் எதிர்பார்க்கப்பட்ட முறைமை கடன்தீர்ப்பனவு காலம் அல்லது முறையை மாற்றுவதன் மூலம் கணிப்பீடு செய்யப்படுவதுடன், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படும். வரையறைக்குள்ளான ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் மீதான கடன் தீர்ப்பனவு செலவினமானது அருவச் சொத்துக்களின் தொழிற்பாட்டுடனான செலவின வகை இணக்கப்பாட்டில் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

அருவச் சொத்து ஒன்றின் இனங்காயலை நிறுத்துவதனால் ஏற்படும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் தேறிய அகற்றுகை வருவாய்களுக்கும் சொத்தின் காவுகைத் தொகைக்கும் இடையிலான வித்தயாசமாக அளவிடப்படுகின்றன. மேலும் சொத்து இனங்காணப்படுவதை நிறுத்தும் போது வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

**கணினி மென்பொருள் பொதியங்கள்**

கணினி மென்பொருள் பொதியங்களைப் பெறுதல்.'.தரமுயர்த்துதலால் ஏற்படும் தொகை அருவச் சொத்தக்களாக இனங்காணப்படுவதுடன், 3 வருடங்களுக்கு மேலாகக் கடன் தீர்ப்பனவு செய்யப்படும்.

### 1.13 குத்தகைச் சொத்துக்கள்

#### 1.13.1 தொழிற்படு குத்தகை

போதியாளவான எல்லா இடர்கள் மற்றும் வெகுமதிகள் உடைமைக்கு எதிர்பாராது நிகழ்கின்ற போது சபைக்கு மாற்றஞ் செய்யப்பட மாட்டாது ("தொழிற்படு குத்தகை"), குத்தகையின் கீழ் செலுத்த வேண்டிய மொத்த வாடகை குத்தகைத் தவணைக்குள் நேர் கொட்டு முறைமை அடிப்பஎ்யில் விபரமான வருமானக் கூற்றுக்குச் சாட்டப்படும்.

### 1.14 பொருட்பதிவேடுகள்

கைவிடப்பட்ட மற்றும் மெதுவாக அசையும் உருப்படிகளுக்கு உரிய முற்பணங்கள் தீரக்கப்பட்டதன் பின்னர் பொருட்பதிவேகள் குறைந்தளவிலான செலவிலும் தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதியிலும் மதிப்பிடப்படும்.

### 1.15 இளைப்பாற்று நன்மைச் செலவு

#### 1.15.1 நிலையான பங்களிப்புத் திட்டங்கள்

சட்ட விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்க முறையே ஊழியர்கள் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புக்களை மேற்கொள்வதற்கு ஊழியர்கள் தகுதியுடையவர்களாவர். ஊழியர்களின் மொத்த வருவாயிலிருந்து 15% மற்றும் 3%இனை முறையே ஊழியர்கள் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புக்களை சபை வழங்குகின்றது.

#### 1.15.2 நிலையான நலன்கள் திட்டங்கள் - பணிக்கொடை

ஊழியர் நன்மைகள் - இலங்கை கணக்கீட்டு நியமங்கள் LKAS 19 இன் உறுதிப்பாட்டுடன் எல்லா ஊழியர்களினதும் சேவைக்காலத்தின் முதல் வருடத்திலிருந்தே இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. எவ்வாறெனினும், 1983இன் பணிக்கொடைக் கொடுப்பனவு சட்ட இல 12இன் கீழ் ஓர் ஊழியருக்கான பொறுப்பு தொடர்ச்சியான ஐந்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யும் போதே எழுகின்றது. பொறுப்பானது வெளிவாரியாக நிதியிடப்படுவதில்லை.

நிலையான பங்களிப்புத் திட்டத்திற்கு மாறாக நிலையான நலன்கள் திட்டமானது தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டமாகும். நிலையான இளைப்பாற்றுத் திட்டம் தொடர்பில் தாபனத்தின் தேறிய கடப்பாடு, நடப்பு மற்றும் முன்னைய காலப்பகுதிகளில் ஊழியர்கள் தமது பணிக்காக ஈட்டிய எதிர்கால நன்மை மீதான தொகையை மதிப்பீடு செய்வதன் மூலம் கணிக்கப்படுகின்றது. அந்நன்மையானது அதன் நடப்புப் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு கழிவு செய்யப்படும். இனங்காணப்படாத கடந்த சேவைகள் செலவினங்கள் கழிக்கப்படும்.

கழிவு வீதமானது அறிக்கையிடும் காலப்பகுதியில் தாபனத்தின் கடப்பாட்டு நிபந்தனைகளைப் பெரிதும் ஒத்திருக்கக்கூடிய முதிர்ச்சி நாட்களைக் கொண்ட உயர் தர கூட்டு முறிகள் மீதான வருவாயாகும். மேலும் அவை நன்மைகள் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் அதே நாணயத்தில் குறிக்கப்படும். நிலையான நன்மைகள் கடப்பாடு வருடாந்தம் நெறிப்படுத்தப்பட்ட அலகுப் பற்று முறைமையைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

ஒரு திட்டத்தின் நன்மைகள் விருத்தி செய்யப்படும் போது, ஊழியர்களால் வழங்கப்பட்ட கடந்த சேவை காலம் தொடர்பாக அதிகரிக்கப்பட்ட நன்மையில் ஒரு பகுதி, நன்மைகள் பொறுப்பில் விடப்படும் வரையிலான சராசரி காலப்பகுதிக்குள் நேர் கோட்டு முறைமை அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் இனங் காணப்படும். நன்மைகள் உடனடியாக அளிக்கப்படும் அளவின் படி செலவினம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் உடனடியாக இனங்காணப்படும். தாபனமானது நிலையான நலன்கள் திட்டங்களினால் எழும் எல்லா காப்புறுதி இலாபங்களையும் நட்டங்களையும் ஏனைய விபரமான வருமானத்தில் இனங்காண்கின்றது.

இளைப்பாற்று நன்மைகள் கடப்பாடுகளைத் தீர்மானிப்பதில் பயன்படுத்தப்படும் முக்கிய எடுகோள்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| கழிவு வீதம் | 11% |
| சம்பள உயர்வு வீதம் | 2% |
| இளைப்பாறும் வயது | 60 வருடங்கள் |

**1.17 வரி விதிப்பு**

**1.17.1 நடைமுறை வரிகள்**

விதியாக்கப்பட்டுள்ள அல்லது அறிக்கையிடும் நாளில் பொருத்தமான முறையில் விதியாக்கப்படும் வரி வீதங்களை மற்றும் கடந்த வருடங்களில் செலுத்த வேண்டிய வரிக்கான ஏதேனும் சரிப்படுத்துகைகளைப் பயன்படுத்தி ஆண்டிற்கான செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் வரி அல்லது வரி அறவிடக்கூடிய வருமானம் அல்லது இழப்பு மீதன வருமதிகளே நடைமுறை வரியாகும்.

**1.18 உரிமைப்பங்கு**

**1.18.1 உறுப்பினர் நிதி**

உறுப்பினர்களிடமிருந்து கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டிய பங்களிப்பு, ஆண்டிற்குள் அவரக்ளுக்கான சேரும் பங்கிலாபம் மற்றும் வட்டியுடனான தேறிய மீளளிப்புக்கள் உறுப்பினர் நிதியத்தில் உள்ளடங்குகின்றன.

**1.18.2 பங்கிலாபங்கள்**

பங்கிலாபங்களாவன பெறுவதற்கான நிதியத்தின் உரிமை உறுதிப்படத்தும் போது இனங்காணப்படுகின்றன.

**1.19 ஏற்பாடுகள்**

நிச்சயமற்ற கால முன்னேற்பாடு மற்றும் தொகைகள் மீதான பொறுப்புக்களுக்கான ஏற்பாடுகளை சபை இனங்கண்டுள்ளது. ஏற்பாடானது அறிக்கையிடும் காலப்பகுதியல் கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் செலவினத்தின் மிகச் சிறந்த மதிப்பீட்டில் அளவிடப்படுவதுடன், பொறுப்புக்கான குறிக்கப்பட்ட இடர்கள் மற்றும் பணத்தின் காலப் பெறுமதி மீதான நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கக் கூடிய வரிக்கு முன்பான கழிவு வீதத்தினைப் பயன்படுத்தி அவற்றின் நடப்புப் பெறுமதிக்கு கழிவு செய்யப்படும்.

## 2. முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகளும் தீர்வுகளும்

சபை எதிர்காலம் தொடர்பான குறிப்பிட்ட மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்கின்றது. மதிப்பீடுகளும் தீர்வுகளும் சூழ்நிலைகளின் கீழ் சாதாரணமானவை என நம்பப்படும் எதிர்கால நிகழ்வுகளின் எதிர்பார்க்கைகள் உட்பட மரபு ரீதியான அனுபவம் மற்றும் ஏனைய காரணிகளின் அடிப்படையில் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுகின்றன. வருங்காலத்தில், உண்மையான அனுபவம் இம்மதிப்பீடுகளிலிருந்தும் ஊகங்களிலிருந்தும் வித்தியாசப்படலாம். அடுத்த நிதி ஆண்டிற்குள்ளான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் காவுகைத் தொகைகளில் ஏற்படுத்தும் பருப்பொருள் சரிப்படுத்துகை காரணமாக முக்கியமான பாதிப்பினைக் கொண்டுள்ள மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டுள்ளன.

**மதிப்பீடுகளும் எடுகோள்களும்**

**(அ) முதலீட்டுச் சொத்தின் விலை மதிப்பீடு**

தாபனம் அதன் முதலீட்டுச் சொத்துக்களுக்கான நியாயமான பெறுமதியினை தீர்மானிப்பதற்காக வெளிவார் மதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்படும் விலை மதிப்பீடுகளைப் பெறுகின்றது. இவ்விலை மதிப்பீடுகள் எதிர்கால வாடகை வருமானம், எதிர்பார்க்கப்படும் பராமரிப்புச் செலவினங்கள், எதிர்கால அபிவிருத்திச் செலவினங்கள் பொருத்தமான கழிவு வீதம் ஆகியவை உட்பட எடுகோள்களின் அடிப்படையில் அமையும். விலை மதிப்பீட்டாளர் அதற்கு ஒத்த சொத்துக்களின் கொடுக்கல் வாங்கல் விலைகளின் சந்தை ஆதாரத்தினை மேற்கோளாக எடுப்பார்.

**(ஆ) நிதிசார் சாதனங்களின் நியாயமான பெறுமதி**

தாபனம் விலை மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி விலை குறிக்கப்படாத நிதிசார சாதனங்களின் நியாயமான பெறுமதியினை தீர்மானிக்கும். கழிவு வீதங்கள் மற்றும் எதிர்கால காசுப் பாய்ச்சல் மீதான மதிப்பீடுகள் உட்பட பயன்படுத்தப்பட்ட எடுகோள்களால் அந்நுட்பங்கள் குறிப்பிடத்தக்களவில் பாதிக்கப்படலாம். அவ்வகையில், சாராத சந்தைகளுடன் ஒப்பீடு செய்வதால் வழிவந்த நியாயமான பெறுமதி மதிப்பீடுகள் எப்போதும் உறுதிப்படுத்த முடியாது போவதுடன், பல சந்தர்ப்பங்களில், உடனடியாக பணமாக்க இயலாத நிலை ஏற்படக் கூடும்.

**(இ) சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகளுககான பயன்தரு ஆயுட்காலம் மற்றும் மீதிப் பெறுமதிகள் ஏற்றதாக இருத்தல்.**

தாபனம் ஆயுட்காலம் மற்றும் மீதிப் பெறுமதி மதிப்பீடுகள் என்பன அதன் கணக்கியற் கொள்கைக்கு இணங்குவதாக உள்ளனவா என வருடாந்தம் பரிசீலிக்கும்.

## 3. நிதிசார் சாதனங்கள் - இடர் முகாமைத்துவம் இடர் முகாமைத்துவ அமைப்பு

சபை அதன் எல்லா வர்த்தகச் செயற்பாடுகளிலும் சட்டங்கள், ஒழுங்கு விதிகள், ஒழுங்கமைப்பு வழிகாட்டிகள், உள்ளகக் கட்டுப்பாடுகள், அனுமதிக்கப்பட்ட கொள்கைகள் ஆகியவற்றுடன் சபையின் இணக்கப்பாட்டினை அடைவதற்கான இணங்கல் தொழிற்பாடு ஒன்றைக் கொண்டுள்ளது.

பொதுவாக ஏனைய அனைத்து வியாபாரங்களுடனும் சபை அதன் நிதிசார் சாதனங்களைப் பயன்படுத்தவதன் காரணமாக எழக்கூடிய இடர்களுக்கு ஆளாகுகின்றது. இக்குறிப்பு சபையின் நோக்கங்கள், கொள்கைகள், அவ்விடர்பாடுகளை முகாமை செய்வதற்கான செயல்முறைகள், அவற்றை அளவிடுவதற்குப் பயன்படுத்தும் வழிமுறைகள் என்பனவற்றை விவரிக்கும். மேலும் இந்நிதிக் கூற்றுக்கள் பூராகவும் இந்த இடர்கள் தொடர்பான தொகைத் தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் சபையின் நோக்கங்கள், கொள்கைகள், அவ்விடர்பாடுகளை முகாமை செய்வதற்கான செயல்முறைகள், அவற்றை அளவிடுவதற்குப் பயன்படுத்தும் வழிமுறைகள், நிதிசார் சாதனங்களின் இடர்பாடுகளுக்கு சபையின் உட்படுகை ஆகியவற்றில் பிரத்தியேகமான மாற்றங்கள் இருந்ததில்லை என்பதுடன் அப்படி இல்லாவிடின் அவை தவிர்ந்த ஏனையவை குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 3.1 கொடுகடன் இடர் நேர்வு

கொடுகடன் இடர் நேர்வானது சபை அதன் வாடிக்கையாளர்கள் அல்லது துணைத்தரப்பினர் தமது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தவறும் போது ஏற்படும் நட்டத்திற்கு சபை ஆளாகும் இடராகும். தனிப்பட்ட துணைதரப்பினர் சார்பாக ஏற்றுக்கொள்வதற்கு விரும்புகின்ற இடர் பெறுமானத்திற்கு வரையறைகளை இடுதல் மற்றும் அவ்வாறான வரையறைகள் தொடர்பான இடர்காப்பின்மைகளை கண்காணித்தல்கள் ஆகியவற்றால் சபை கொடுகடன் இடர்நேர்வினை நிர்வகிப்பதுடன் கட்டுப்படுத்துகின்றது.

### 3.2 பெறுமதி இழப்பு மதிப்பீடு

கணக்கியல் நோக்கங்களுக்காக, பெறுமதி இழந்த நிதிச் சொத்துக்கள் மீதான நட்டங்களின் இனங்காணலுக்காக சபை ஆட்கொள்ளும் நட்ட மாதிரியொன்றை பயன்படுத்துகின்றது. அதாவது, குறிப்பிட்ட ஒரு நட்ட நிகழ்வின் உண்மையான ஆதாரம் அவதானிக்கப்படுகின்ற போதே நட்டங்கள் இனங்காணப்படலாம். அதற்கு உந்துதல் அளிக்கும் விடயங்களில் உள்ளடங்குபவை பின்வருமாறு:

- வாடிக்கையாளரின் முக்கியமான நிதிசார் தடங்கல்கள்
- கொடுப்பனவு தவறுதல் போன்ற ஒப்பந்த மீறல்
- வாடிக்கையாளர் நிதிசார் தடங்கலுக்கு முகங்கொடுப்பதன் காரணமாக சபை வாடிக்கையாளருக்கு சலுகை வழங்கும் போது
- வாடிக்கையாளர் பொருளாதார முறிவுக்கு அல்லது ஏனைய நிதிசார் மீளமைப்புக்களுக்கு ஆளாகுவது சாத்தியமாதல்
- கடன்களிலிருந்து மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் குறைவினைத் தெரிவிக்கும் தரவுகளை அவதானிக்க முடிதல்.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

# கணக்காய்வு நாயகத்தின் அறிக்கை 2012

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. — ஈஎல்/டி/ஈரிஎவ்/எவ்ஏ/12 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date — 2012 பெப்ரவரி 17 |

தலைவர்

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை

**ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையின் 2012 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள்தொடர்பாக 1980ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச் சட்டத்தின் 10(7) ஆம் பிரிவின்பிரகாரம் கண்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் 2012 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்துடன் முடிவுற்ற வருடத்திற்கான முழுமையான வருமானக்கூற்று, உரிமை மாற்றக்கூற்று மற்றும் பணப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தும் தகவல்கள் ஆகியவற்றின் சாராம்சத்துடன் 2012 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்று தொடர்பான 1980ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் 10(1) ஆம் பிரிவுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 10(7) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் மற்றும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றானது இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கமைய தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய இயன்றவரை பிழையான கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் கருதும் உள்ளகக் கட்டுபாட்டைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் பற்றிய அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கமைய எனது கணக்காய்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஒழுக்கநெறி முறைகளிற்கு நான் கட்டுபட்டு செயற்படுவதனையும் நிதிக்கூற்றுக்கள் கூடியவரை பிழையான

கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதன் பொருட்டு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் காணப்படும் பெறுமதிகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் ஆகியவற்றிற்கு உதவும் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்விற்குள் உள்ளடக்குகின்றன. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள், மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பிறழ்வுத் தன்மையின் பாதிப்பினை மதிப்பீடு செய்து உள்ளடக்குவது கணக்காய்வாளரின் தீர்வின் அடிப்படையிலாகும். அப்பாதிப்புக்களை மதிப்பீடு செய்யும்போது நிலைமைகளிற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பொருட்டு சபையின் நிதிக்கூற்றினைத் தயாரித்து மற்றும் நியாயமானதாக சமர்ப்பிப்பதற்கு உரியவாறு உள்ளக நிர்வாகத்தினை கணக்காய்வாளர் கவனத்திற் கொள்வாரேயொழிய ஆனால் சபையின் உள்ளக நிர்வாகத்தின் செயற்றிறன் பற்றிய அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கான கருத்தாக அமையாது. முகாமைத்துவத்தினால் பின்பற்றப்படுகின்ற கணக்காய்வுக் கோட்பாடுகளின் பொருத்தப்பாடுகளையும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான பெறுமதிகளையும் நிதிக்கூற்றுக்களில் மொத்தமாக சமர்ப்பித்தல் பற்றிய மதிப்பீடு ஆகியவையும் கணக்காய்விற்குள் உள்ளடங்குகின்றது. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அளவினைத் தீர்மானிப்பதற்கு 1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 10(1)ஆம் பிரிவின் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனது தரப்படுத்தப்பட்ட கண்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதன் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.4 தரப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் தரப்படுத்தப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இவ் அறிக்கையின் 2.2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர 2012 டிசம்பர் 31 ஆம் திகதி ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்துடன் முடிவடைந்த வருடத்திற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் பணப் பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கமைய உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகள் பற்றி நிதிக்கூற்றுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் பற்றி கருத்துரைகள் தெரிவித்தல்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 16 இன் 34ஆம் பிரிவில் உள்ளவாறு சொத்துக்களின் நியாயமான பெறுமதியில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படவில்லை என்பதுடன் அவ் வேறுபாடுகளை அடையாளம் காண்பதற்கு 3 வருடங்களிற்கு அல்லது 5 வருடங்களிற்கு ஒருமுறை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டுமென்பதுடன் சபையின் 188,241,276 ரூ பெறுமதியான நிலையான சொத்தானது அவ்வாறான மீள்மதிப்பீடு செய்யப்படவில்லை.

#### 2.2.2 அங்கத்துவக் கணக்குகளில் வரவு வைக்கப்படாத பங்களிப்புப் பணம்

2012 டிசம்பர் 31ஆம் திகதியில் அங்கத்துவ நிதிக் கணக்கின் மீதி 153,631,425,664 ரூபாவென நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அத்தினத்தில் உண்மையாக அங்கத்துவக் கணக்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட பணம் 143,079,139,946 ரூபாவாகும். இத்தினத்தில் நிதிக்கு வழங்கும் அங்கத்துவ

கணக்குகளிற்கு வரவு வைக்கப்படாதுள்ள பணம் 10,552,285,718 ரூபாவாகும். இப்பணத்தில் 4,099,849,873 ரூபாவானது கடந்த 32 வருடங்களாக பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் ஆனால் 2012 டிசம்பர் 31ஆம் திகதி வரை அங்கத்துவ கணக்குகளிற்கு வரவு வைக்கப்படாதுள்ள அங்கத்துவ பங்களிப்பு பணமென்பதுடன் மிகுதி 6,452,435,845ரூ பணமானது மேற்குறித்த பெற்றுக்கொள்ளும் பங்களிப்பு பணத்திற்குரிய அங்கத்துவக் கணக்குகளிற்கு வரவு வைக்க வேண்டியுள்ள வட்டியானது இதுவரை கணக்கில் வைக்கப்படவில்லை. பெற்றுக்கொண்ட பங்களிப்புப் பணம் பற்றிய காலப் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

| பெற்றுக் கொண்டுள்ள அங்கத்துவக் கணக்குகளிற்கு வரவு வைக்கப்படாத மீதியின் வருடங்களின் வகுப்பாயிடை | இதுவரை கணக்கில் வைக்கப்படாத பங்களிப்புப் பணம் |
|---|---|
| 1 இலிருந்து 5 வருடங்கள் வரை | 2,170,507,917 |
| 5 இலிருந்து 10 வருடங்கள் வரை | 824,534,055 |
| 10 இலிருந்து 15 வருடங்கள் வரை | 417,178,073 |
| 15 இலிருந்து 20 வருடங்கள் வரை | 226,346,967 |
| 20 இலிருந்து 25 வருடங்கள் வரை | 240,248,355 |
| 25 வருடங்களிற்கு மேல் | 221,034,506 |
| மொத்தம் | **4,099,849,873** |

மாதத்திற்கு ஒரு தடவை செலுத்தப்படுகின்ற அங்கத்துவப் பணத்திற்குரிய அங்கத்தவர் விபரம் மாதத்திற்கு அல்லது 6 மாதங்களிற்கு ஒரு தடவை நிதிக்கு பெற்றுக் கொள்வதுடன் அங்கத்துவப் பணம் வைப்பிலிடப்படுவது அடுத்துவரும் வருடம் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி மேற்கொள்ளப்படுவதுடன் இப்படியான அங்கத்துவப் பணம் வைப்பிலிடப்படுவது தாமதிக்கப்படுவது தொழில்தருநர்கள் வரவு வைக்கப்படும் ஊழியர் விபரத்தை வழங்காமை, வழங்கப்படும் தரவுகள் தெளிவில்லாமை, பல நிறுவனங்கள் ஒரு காசோலையில் பணத்தைச் செலுத்துவதன் காரணமாக பகுப்பாய்வு கடினமாதல், முகாமைத்துவ மாற்றம் காரணமாக அதற்கு முந்திய காலங்களிற்குரிய தகவல்களைச் சேகரிக்க இயலாமை, பெருந்தோட்டம் சார்ந்துள்ள ஊழியர்களின் பெயர்களில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் செயலற்ற அங்கத்தவர்களின் பணம் செலுத்தப்படடிருப்பினும் விபரங்கள் சமர்ப்பிக்கப்படாதிருத்தல் போன்ற காரணங்களாலும் இப்படியாக முன்னர் கழிக்கப்பட வேண்டிய அங்கத்துவப் பணம் கழிக்கப்படும் வரை வட்டியானது அங்கத்துவப் பணத்திற்கு வரவு வைக்கப்பட மாட்டாது எனவும் பதிலாக சபையின் தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2.2.3 பெற்றுக்கொள்ள வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொறுப்புக்களின் கீழ் காணப்படுகின்ற 1995ஆம் ஆண்டிலிருந்து சந்ததி உரிமை கோரப்படாத மரண சகாயக் உரிமை கோரப்படாத மீளளிப்புகள் கணக்கின் மீதி 7,573,890 ரூபாவாகக் காணப்படுவதுடன் 2001ஆம் ஆண்டில் இருந்து மீளச் செலுத்தப்படும் மரண சகாயக் கணக்கின் மீதி 13,905,162 ரூபாவாகக் காணப்படுவதுடன் மீளாய்வு ஆண்டு இறுதி வரை தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது. அங்கத்தவரின் மரணத்தின் பின் அவரது மரண சகாய நலனை பெற்றுக்கொள்வதற்கு ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் உரிமை கோருதல் மற்றும் அவர்கள் எல்லோரும் ஒரே தடவையில் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்காது விடுவது போன்ற காரணங்களால் சரியான உரிமையாளரை தீர்மானிக்கும் வரை நிறுத்தி வைத்திருப்பதால் உரிமை கோரப்படாத மரண சகாயக் கணக்கின் மீதியில் 2013ஆம் ஆண்டிலே 5 உரிமை கோரியவர்களுக்கு 391,744 ரூ கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாகவும் சகாய விண்ணப்பதாரர்களின் வங்கிக் கணக்கு விடயங்களின் தவறுகளைத் திருத்தி மீளவும் செலுத்தும்

வரை நிறுத்தி வைத்து மீளத்திருப்பப்பட்ட சகாயக் கணக்கின் மீதியாக 2013ஆம் ஆண்டின் 3,257,115 ரூபா செலுத்தப்பட்டுள்ளதாகவும் இதற்குப் பதிலாக சபையின் தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2001ஆம் ஆண்டிலிருந்து அதிகரித்துக் காணப்படும் 2012 டிசம்பர் 31ஆம் திகதி 5,149,573 ரூ மீளச் செலுத்தும் சகாயக் கணக்கின் மீதி தெளிவுபடுத்தப்படவில்லை. "காசோலை மூலம் விண்ணப்பதாரர்களுக்கு செலுத்தப்பட்ட ஆனால் வங்கியிடம் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி எடுத்துக் காட்டப்பட்டதுடன் அம்மீதியானது 2013ஆம் ஆண்டிலே 468,728 ரூபாவை 22 மரண சகாய விண்ணப்பதாரர்களுக்கு வழங்கியுள்ளதாகவும் இதற்கு பதிலளிக்கும் வகையில் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

(இ) கடந்த வருடத்தில் சபையின் ஒரு உத்தியோகத்தருக்கு வாகனக் கடன் வழங்கும்போது கூடுதலாக வழங்கப்பட்ட ரூபா 61,770 பணம் மீள் அறவிடப்படாத நிலுவையாக இருந்தது.

(ஈ) சேவையிலிருந்து விலகி 1 முதல் 13 வருடம் வரையிலான காலம் கடந்துவிட்ட 18 உத்தியோகத்தர்களிடமிருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய மீதியானது 2013 ஒக்டோபர் 04ஆம் திகதிவரை 260,281 ரூபாவாகக் காணப்பட்டது.

(உ) பங்களிப்புப் பணமாக காசுக்கட்டளை முலம் பெறப்பட்ட 1,218,909 ரூபா தபால் திணைக்களத்தின் தாமதம் காரணமாக அறவிடப்படவேண்டிய நிலுவையாக 2013 ஒக்டோபர் 04ஆம் திகதி இருந்தது.

**2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கபாடின்மை**

கீழே குறிப்பிட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணக்கப்பாடில்லாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கபாடின்மை |
|---|---|
| (அ) 1999 ஒக்டோபர் 08ஆம் திகதியிடப்பட்ட 22/99ஆம் இல. பொதுநிர்வாகச் சுற்றறிக்கையின் 1.1.6ஆம் பிரிவு மற்றும் 2.3ஆம் பிரிவு | இப்பிரிவுகளிற்கு முரணாக நிறுவனத்தின் 09 உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட போக்குவரத்து பிரயாணங்களிற்காக மீளாய்வாண்டில் சபை எரிபொருளிற்காக செய்யப்பட்ட செலவினம் 4,108,740 ரூபாவாகும். |
| (ஆ) பொது முயற்சி மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கை | |
| பொது முயற்சிகள் திணைக்களத்தின் 1998 மார்ச் 18ஆம் திகதியிடப்பட்ட 130ஆம் இலக்கச் சுற்றறிக்கை மற்றும் 1997 நவம்பர் 19ஆம் திகதியிடப்பட்ட 26/47 ஆம் இல. பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2011 ஒக்டோபர் 18ஆம் திகதி இடம்பெற்ற 56ஆம் இலக்க பொது முயற்சிகள் பற்றிய செயற்குழு கூட்டக் குறிப்பின் 19ஆம் பிரிவு | 4.2% ஊழியர் கடன் வட்டி வீத அடிப்படையில் கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சபை ஊழியர்களுக்கு கடன் வழங்கப்படலாகாதெனக் குறிப்பிட்டுள்ள போதும் அதற்கு முரணாக மேற்படி வட்டி வீத்திலும் அதற்குக் குறைவான வட்டி வீதத்திலும் ஊழியர் கடன் வழங்கப்பட்டுள்ளது. 2012 டிசம்பர் 31ஆம் திகதிவரை மேற்படி வட்டி வீத அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள 413,101,257ரூ கடன் மீதியானது அறவிடப்பட வேண்டியுள்ளது |

| | |
|---|---|
| (இ) 2003 ஜூன் 06ஆம் திகதியிடப்பட்ட பீஈடி 12ஆம் இலக்க பொது முயற்சி சுற்றறிக்கை | |
| (i) பிரிவு 8.7 | 2012 ஆம் ஆண்டிற்கு செலுத்த வெண்டிய 1,310,687ரூபா உழைக்கும்போது செலுத்தும் வரிப் பணமானது உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படாது சபையின் பணத்திலிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது |
| (ii) பிரிவு 9.12 | சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித் திட்டத்திற்காக பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் திறைசேரியினது அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற போதிலும் அவ்வாறான அனுமதியினைப் பெற்றுக் கொள்ளாது நலன்புரி நிகழ்ச்சிக்காக மீளாய்வாண்டிலே 16,847,846ரூ செலவு செய்யப்பட்டுள்ளது. |
| (ஈ) 2000 ஜனவரி 11ஆம் திகதியிடப்பட்ட பீஎப்/பீஈ 5ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2011 ஒக்டோபர் 18ஆம் திகதி இடம்பெற்ற 56ஆம் இலக்க பொது முயற்சிகள் பற்றிய செயற்குழு கூட்டக் குறிப்பின் 16ஆம் பிரிவு | திறைசேரியின் அனுமதியின்றி ஊக்குவிப்புக் கொடுப்பனவாக மீளாய்வாண்டில் 81,067,392 ரூ வழங்கப்பட்டுள்ளது. இத் தவறினைத் திருத்தம் செய்யுமாறு பொது முயற்சிகள் செயற்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) 2011 டிசம்பர் 22ஆம் திகதியிடப்பட்ட 47ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை | இச்சுற்றறிக்கையின் 1ஆம் மற்றும் 2ஆம் பிரிவுகளிற்கு முரணாக மீளாய்வாண்டிலே 48,727,577ரூ மிகையூதியமாக வழங்கப் பட்டுள்ளது. பிரிவு 8இன் பிரகாரம் சுற்றறிக்கை ஒழுங்குகளிற்கு அப்பால் மிகையூதியம் வழங்கப்படுவதாயின் அமைச்சரவையிடம் முன்கூட்டியே அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற போதிலும் சபை அதற்கமைய செயற்படவில்லை. |
| (ஊ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் (நி.பி) | |
| (i) நி. பி. 104 | 45 வாகன விபத்துக்கள் தொடர்பான இழப்பு பற்றிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாதிருத்தல்

2012 டிசம்பர் 31ஆம் திகதியில் 390,537,752 ரூ பெறுமதியான நிலையான சொத்தினை பௌதீக ரீதியாக உறுதிப்படுத்துவதற்கான பொருட் கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2.6 போதியளவு அதிகாரம் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வருவனவற்றிற்கான பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் 1999 இலிருந்து சபையில் அமுலாக்கப்படும் நிதிச் செயற்பாட்டு முறைமைக் கோப்பிற்காக மீளாய்வாண்டு முடியும் வரை நிதி அமைச்சிலோ

அல்லது திறைசேரியிலோ அனுமதி பெற்றுக் கொள்ளப்படவில்லை. இச் செயற்பாட்டு முறைமைக் கோப்பிற்கு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக்கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை விதிகளிற்கு முரணான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ஆ) திறைசேரியின் அனுமதியின்றி சபை உத்தியோகத்தர்களுக்கு 1993 இலிருந்து சீருடைகள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் இதற்காக மீளாய்வாண்டிலே 6,236,582 ரூ செலவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 5 வருடங்களில் அப்படியான அனுமதியின்றி நிதியிலிருந்து சீருடைக்காக செலவிடப்பட்ட செலவினம் 36,575,879 ரூபாவாகும்.

# 3 நிதி மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக செயற்பாட்டு விளைவு 12,147,948,316 ரூ மிகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகையானது 11,307,220,814 ரூபாவாகும். அதன்படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் மிகையில் 840,727,502 ரூ அதிகரிப்படைந்துள்ளது. வட்டி வருமானம், பங்குலாப வருமானம் மற்றும் நிகர நிகழ்கால பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்கள் இம்மிகைப் பெறுமான அதிகரிப்பிற்கு காரணமாகவுள்ளது.

## 3.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் சபையின் மிகையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது நூற்றுக்கு 7.44 சதவீதம் அதிகரித்துள்ளதுடன் அங்கத்தவர்களிற்கு வழங்கப்படுகின்ற உரிமைப்பயன்பாட்டுச் சதவீதமானது நூற்றுக்கு 10 ஆகக் காணப்படுவதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மாற்றமொன்றும் காணப்படவில்லை. 2008ஆம் ஆண்டிலிருந்து 2012ஆம் ஆண்டு வரை செலுத்தப்படுகின்ற உரிமைப்பயன்பாடு பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|---|
| அங்கத்தவர்களிற்குச் செலுத்தப்படுகின்ற உரிமைப்பயன்பாடு | 10 % | 10 % | 12.5 % | 13 % | 12 % |

(ஆ) நிதியத்தில் அங்கத்தவர்களினது உரிமையாண்மை, மொத்தப் பங்களிப்பு மற்றும் பிரேரிக்கப்பட்ட வட்டியின்

| ஆண்டு | மொத்தப் பங்களிப்பு ரூபா (மில்லியன்) | திரள்வட்டி ரூபா (மில்லியன்) | அங்கத்தவர்களின் உரிமையாண்மை ரூபா (மில்லியன்) |
|---|---|---|---|
| 2008 | 44,301 | 44,568 | 88,869 |
| 2009 | 49,834 | 53,223 | 103,057 |
| 2010 | 56,616 | 63,236 | 119,852 |
| 2011 | 64,054 | 71,432 | 135,486 |
| 2012 | 72,773 | 80,858 | 153,631 |

மேற்படி தகவல்களின்படி 2012ஆம் ஆண்டு வரை சபையின் அங்கத்தவர்களின் முழு உரிமையாண்மையில் நூற்றுக்கு 47 வீதமானது பங்களிப்புத் தொகையாக இருப்பதுடன் நூற்றுக்கு 53 வீதமானது திரள்வட்டியாகவும் இருந்தது. அதேபோல 2011ஆம் ஆண்டுடன் 2012ஆம் ஆண்டினை ஒப்பீட்டுப் பார்க்கும்போது 2012இல் அங்கத்தவர்களின் முழு உரிமையாண்மை நூற்றுக்கு 13.39 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் அவ்வருடத்தில் மொத்தப் பங்களிப்பானது நூற்றுக்கு 13.61 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்றிறன்

#### 4.1.1 செயற்பாட்டு வினைத்திறன்

கீழே தரப்பட்டுள்ள பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012ஆம் வருட முடிவில் செயற்றிறனின் நிலைமைபின்வருமாறு

| விடயம் | துல்லியமான எண்ணிக்கை | நிதிச் செயற்பாட்டிற்கு உரிய எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| தனியார் மற்றும் அரசுசார் துறையில் சேவையில் ஈடுபட்டுள்ளோர் | 3,832,840 | 2,200,000 | 57.40 % |
| தொழில் வழங்குநர் | 227,612 | 70,194 | 30.84 % |
| நிதியத்தின் அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை (மில்லியன்) | 9.8 | 2.2 | 22.45 % |

2012ஆம் அண்டு முடிவிலே இலங்கையில் தொழிலில் ஈடுபட்டுள்ளோரில் சுயதொழிலில் ஈடுபட்டுள்ள 2,593,151 நபர்களை நிதியத்தில் இணைத்து சலுகைகள் வழங்குவதற்கு போதிய வேலைத்திட்டம் எதுவும் சபையால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ‘‘பிரதேச அலுவலக வலைப்பின்னலை உபயோகித்து சுயதொழிலில் ஈடுபட்டுள்ளோர்களை இச்சபையில் இணைத்துக் கொள்வதற்கு படிப்படியாக வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும் நிமித்தம் 2013ஆம் ஆண்டு முடிவிலே சுயதொழில் அங்கத்தவர்களின் பெருமளவு அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவதால் அச் சுயதொழிலில் ஈடுபடுபவர்களை நிதியத்தில் இணைப்பதில் தங்கள் சுயவிருப்பில் பங்களிப்புச் செலுத்த வேண்டியிருப்பதால் அதன் வளர்ச்சிக்கு இடையூறாக விளங்குமென’’ சபைத் தலைவர் அவர்களால் பதிலளிக்கப்பட்டது.

(ஆதாரம் : இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை 2012)

(ஆ) கடந்த 5 வருட கால எல்லைக்குள் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையால் செயற்படுத்தப்பட்ட புலமைப்பரிசில் வழங்கும் வேலைத்திட்டத்திற்குரிய தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | நிதியத்திற்கு பங்களிப்புச் செய்துள்ள அங்கத்தவர்கள் எண்ணிக்கை | மாணவச் சிறுவர்களிற்கான புலைமைப்பரிசில் பெற்றுக்கொண்ட அங்கத்தவர்கள் எண்ணிக்கை | ஆண்டு 5 புலைமைப்பரிசில் செலவினம் (ரூபா) | உயர்தரப் புலைமைப்பரிசில் செலவினம் (ரூபா) | மொத்தப் புலைமைப்பரிசில் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 2008 | 2,100,000 | 2,497 | 26,084,760 | - | 26,084,760 |
| 2009 | 2,100,000 | 3,000 | 46,811,006 | - | 46,811,006 |
| 2010 | 2,100,000 | 3,000 | 45,385,680 | - | 45,385,680 |
| 2011 | 2,100,000 | 6,669 | 74,051,599 | 23,640,000 | 97,691,599 |
| 2012 | 2,200,000 | 6,962 | 75,775,685 | 23,604,000 | 99,379,685 |

கடந்த 5 வருட கால எல்லைக்குள் 2,200,000 மொத்த அங்கத்தவர்களிற்குச் சொந்தமான நிதியத்தில் 22,128 நபர்களுக்கு மட்டும் இவ்வகையான புலைமைப்பரிசில்கள் வழங்குவதற்கு சபை செயற்பட்டதுடன் கல்விச் செயற்பாட்டினை மேற்கொள்ள இயலாத அங்கத்தவர்களின் பிள்ளைகளிற்கு கல்விச் செயற்பாட்டினை உயர்த்துவதற்கான செயற்றிட்டம் பற்றி மீளாய்வாண்டு இதுவரை சபை கவனம் எடுத்துக்கொண்டதில்லை.

### 4.1.2 முதலீடுகளும் முதலீட்டு வருமானமும்

மீளாய்வாண்டின் ஆரம்ப தினத்தில் 135,099 மில்லியன் ரூபாவாக இருந்த முதலீடுகள் ஆனது கொள்வனவுகள் மற்றும் முதிர்வடைதல் ஆகியவற்றின் பின்னர் இறுதி மீதியானது 150,000 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இது சம்பந்தமாக கீழே தரப்பட்டுள்ள அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறுகிய கால ரீப்போ முதலீடு

குறுகிய கால ரீப்போ முதலீடாக பார்க்கும்போது 2006ஆம் ஆண்டிலிருந்து நீண்ட காலமாக இருசாரார் ஒப்பந்த இணக்கப்பாட்டுடன் ஏதோவொரு அரச வங்கியில் சபைக்கு வழங்கப்படுகின்ற சேவைக்குச் சலுகையாக வழங்க பெற்றுக்கொண்ட 500,000,000 ரூபா வைப்பினால் 2012ஆம் ஆண்டிலே திறைசேரி உண்டியலிற்காக 364 நாட்களிற்கு வழங்கும் வட்டிவீதத்தினை பெற்றுக்கொள்ளாதன் காரணமாக சபைக்கு 2012ஆம் ஆண்டிலே இழக்கப்பட்ட வருமானம் அண்ணளவாக 12,011,821 ரூபாவாகும். ‘‘2013ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் முறையே 10 மில்லியன் ரூபா மற்றும் 490 மில்லியன் ரூபா என மொத்தமாக 500 மில்லியன் ரூபா இம்முதலீட்டில் முறையே நூற்றுக்கு 15 வீதமாகவும் நூற்றுக்கு 12 வீதமாகவும் வட்டியுடன் குறித்த வங்கியில் நிலையான வைப்பில் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக’’ சபைத் தலைவர் அவர்களால் பதில் தெரிவிக்கப்பட்டது.

(ஆ) பங்குச் சந்தை முதலீடுகள்

2012ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் தொகுதி1 மற்றும் தொகுதி2 என 115,385,085 பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டன. 8,620,461,119 ரூ முதலீடு தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013ஆம் ஆண்டு ஜுன் 30ஆம் திகதியில் தொகுதி1 மற்றும் தொகுதி2 என பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட 83 கம்பனிகளில் 107,312,668 பங்குகளை சபையால் பெற்றுக்கொண்டு 8,013,793,452 ரூபாவிற்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது. இம் முதலீட்டில் 68 கம்பனிகளில் 83,036,582 பங்குகளிற்கு முதலீடு செய்யப்பட்டுள்ள 6,333,036,059 ரூபாவானது முதலீட்டுப் பங்குச் சந்தையில் 4,864,387,677 வரை 1,468,648,382ரூபாவால் குறைந்துள்ளது.

(ii) 2012ஆம் ஆண்டிலே கொழும்புப் பங்குச் சந்தையிலே பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டதுடன் 2010 மற்றும் 2011 ஆண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 2012ஆம் ஆண்டிலே கிடைக்கப்பெற்ற பங்குச் சந்தை முதலீட்டு வருமானத்தின் வீழ்ச்சி பின்வருமாறு

| ஆண்டு | கம்பனிகளின் எண்ணிக்கை | பங்குகளின் எண்ணிக்கை | முதலீடு ஜனவரி 01ஆம் திகதி (ரூபா) | பெற்ற முதலீட்டு வருமானம் (ரூபா) | வருமான சதவீதம் % |
|---|---|---|---|---|---|
| 2010 | 116 | 41,549,265 | 2,719,879,864 | 1,308,502,652 | 48.1 |
| 2011 | 130 | 78,211,481 | 5,204,377,279 | 703,052,274 | 13.5 |
| 2012 | 107 | 101,999,123 | 7,713,939,116 | 324,179,030 | 4.2 |

2012 ஆம் ஆண்டிலே இப்பணமானது இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி உண்டியலில் முதலீடு செய்யப்பட்டிருப்பின் பெற்றுக்கொள்ளக் கூடிய வருமானத்துடன் ஒப்பீடு செய்தால் இம்முதலீட்டினால் ஏற்படும் வருமான இழப்பானது 577,580,453 ரூபாவாகும். ‘‘பங்குச் சந்தையில் முதலீட்டு இலாபம் கூட அதேபோல மிகவும் கூடுதலாகன அவதானத்துடன் இருக்க வேண்டுமென்பதுடன் இலாபத்தினை நீண்டகால நோக்காகக் கருதியும் பங்குச் சந்தையில் விலை உயரும் வேளைகளில் மிக உயர்வான இலாபத்தைப் பெற்றுக் கொள்ளலாம்’’ என சபையின் தலைவர் வழங்கிய பதிலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(iii) தொகுதி1 மற்றும் தொகுதி2 முதலீடுகள் என 2012 ஆம் ஆண்டிலே 25 கம்பனிகள் 13,046,750 பங்குகளைப் பெற்றுக்கொண்ட 226,125,038 ரூபாவை முதலீடு செய்ததில் சபைக்கு எவ்விதமான வருமானத்தையும் பெற்றுக்கொள்ளவில்லை. கடந்த 3 வருட கால எல்லைக்குள் இப்படி ஒரு வருமானமும் பெற்றுக்கொள்ளாத சபையின் நிதி முதலீடு செய்யப்பட்ட கம்பனிகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | கம்பனிகளின் எண்ணிக்கை | முதலீட்டுப் பங்குகளின் எண்ணிக்கை | முதலீடு (ரூபா) |
|---|---|---|---|
| 2010 | 17 | 4,111,468 | 119,083,880 |
| 2011 | 18 | 7,683,979 | 163,867,080 |
| 2012 | 25 | 13,046,750 | 226,125,038 |

(iv) நிதியத்தில் பங்கு முதலீட்டில் பெற்றுக்கொள்ளும் வருமானம் குறைவடைதல் மற்றும் நாளுக்கு நாள் பங்குச் சந்தையில் பங்குகளின் விலை கீழிறங்குதல் பற்றி கருத்திற் கொள்ளாது 2012ஆம் ஆண்டு பட்டியலிடப்பட்ட 42 கம்பனிகளில் பங்குச் சந்தையில் புதிதாக 23,240,912 பங்குகளை 1,810,894,725 ரூபாவிற்கு கொள்வனவு செய்ததுடன் 2013ஆம் ஆண்டு ஜுன் 30ஆம் திகதி வரை இவ்வாறே 26 கம்பனிகளில் 879,359,901 ரூபாவிற்கு புதிதாக 8,030,618 பங்குகளின் பெறுமதியானது பங்குச் சந்தையில் 248,609,303 ரூபாவாகக் குறைந்துள்ளது.

(v) சபையானது 1997-1999 வரையான கால இடைவெளியில் பட்டியலிடப்படாத 3 கம்பனிகளில் 4,067,500 பங்குகளை 485,834,544 ரூபாவிற்கு வாங்கி முதலீடு செய்துள்ளது. அம்மூன்று கம்பனிகளிற்கான 2011 மற்றும் 2012 ஆம் வருடங்களில் பெற்றுக்கொண்ட வருமானம் மற்றும் வருமான சதவீதம் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| கம்பனி | முதலீடு (ரூபா) | 2011 வருமானம் (ரூபா) | 2011 சதவீதம் % | 2012 வருமானம் (ரூபா) | 2012 சதவீதம் % |
|---|---|---|---|---|---|
| 1 | 14,248,606 | | | | |
| 2 | 625,000 | 93,750 | 15 | 93,750 | 15 |
| 3 | 470,960,937 | 12,600,000 | 2.67 | 12,600,000 | 2.67 |
| மொத்தம | 485,834,544 | 12,693,750 | 2.61 | 12,693,750 | 2.61 |

இப்பட்டியலிடப்படாத கம்பனிகளில் செய்யப்படும் முதலீட்டிற்காக வருடாந்தம் பெற்றுக்கொள்ளப்படும் மொத்த வருமானத்தின் சதவீதம் நூற்றுக்கு 2.61 ஆவதுடன் 14,248,606 ரூபாவிற்கு முதலீடு செய்த கம்பனியிலிருந்து 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்கான வருமானம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. இக்கம்பனி பங்குச் சந்தையில் கொடுக்கல் வாங்கலிற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளாததால் மூலதனம் இலாபத்தையோ அல்லது முதலீட்டுப் பணத்தினையோ மீளப்பெறுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

(vi) 2006ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து செயற்படுத்தும் சபையின் முதலீட்டுக் கொள்கைப் பிரகடனம் 2012ஆம் ஆண்டு டிசம்பர் 01ஆம் திகதி மீண்டும் திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டது. இதுபற்றி கீழே தரப்பட்டுள்ள அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 1980ஆம் ஆண்டின் 46ஆம் இல ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சட்டத்தின் 8(அ) மற்றும் (இ) பிரிவுகளின் கீழ் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரம் சபையினால் நேரடியாக தலையிட்டு அங்கீகரித்து செயற்படுத்துவதற்கு ஊகித்து நிறைவேற்றுகிற பங்குச்சந்தைக் கொடுக்கல் வாங்கல்களில் முதலீட்டுக் கொள்கைப் பிரகடனத்தின் 2006ஆம் ஆண்டின் செப்டம்பர் 4.1 (பி) ஊடாகவும் 2012ஆம் ஆண்டின் டிசம்பர் 4.2 (ஏ) xi ஊடாகவும் சபையின் செயற்குழுவிடம் அதிகாரம் ஒப்படைத்தல் கேள்விக்குட்படுத்தப்பட்டு விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

- இணைப்பு “ஏ” இல் குறிப்பிடப்பட்டுள்ள நட்டத்திற்கு பங்குகள் மற்றும் கூறு விற்பனைக்காக அனுமதிக்கு உரிய பிரிவிற்காக திறைசேரியின் ஒப்புதலுடனும் பணிப்பாளர் சபையின் அனுமதியுடனும் நட்டத்திற்கு பங்கு வியாபாரம் மேற்கொள்ளப்படக் கூடியதாக பிரிவுகள் உள்ளடக்கப்பட்டு ஆனால் நட்டத்திற்கு பங்கு மற்றும் கூறுகளை விற்பதற்கு இக்கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்ட பிரிவில் பிரச்சினைகள் ஏற்படும் நிலைமைகள் உள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டிலே இக்கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதியின் கீழ் 16,429,168 ரூபா நட்டத்திற்கு ஏதோவொரு கம்பனிப் பங்குகள் விற்கப்பட்டுள்ளது.

(vii) 624,570 பங்குகளில் 25,227,541 ரூபா முதலீடு செய்யப்பட்ட 2 கம்பனிகள் கலைப்பிற்கு உட்படுத்தப்பட்டதுடன் 178,700 பங்குகளில் 4,066,314 ரூபா முதலீடு செய்யப்பட்ட கம்பனியானது பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிப் பட்டியலிலிருந்து விலக்கப்பட்டதன் காரணமாக 2000ஆம் ஆண்டளவிலிருந்து சபைக்கு அக்கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்ட 29,239,855 ரூ பணத்தினையோ அல்லது வேறு எவ்விதமான வருமானத்தையோ பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(viii) 2012ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரை 1 ½ வருடங்களிலிருந்து 14 வருடங்கள் வரையான கால எல்லைக்குள் மூலதனச் சந்தையிலே கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளாதிருந்த 06 கம்பனிகிளில் முதலீடு செய்யப்பட்ட தொகையான 93,074,734 ரூபா என்பதுடன் அவ்வாறான பங்குச் சந்தையில் கொடுக்கல் வாங்கலிற்காக இம்முதலீட்டினை மேற்கொள்ளாததன் காரணமாக சபைக்கு மூலதன இலாபத்தினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ix) 2011ஆம் ஆண்டு ஜனவரி 01ஆம் திகதியில் பங்குச் சந்தையிலே முதலீடு செய்யப்பட்டுள்ள 5.204,377.279 ரூபாவிலிருந்து 2012ஆம் ஆண்டு ஜனவரி 01ஆம் திகதியன்று 7.713,996,715 வரை அதிகரித்து ஆனால் இதற்கு முன்னைய வருடங்களுடன் ஒப்பிட்டுகையில் மீளாய்வாண்டின் பங்கு விற்பனையில் பெற்றுக்கொண்ட மூலதன இலாபத்தில் 430,572,328 ரூபா குறைவடைந்ததுடன் அவ்வாறான குறைவானது 77.6% சதவீதமாகும்.

(x) சபையின் 2012ஆம் ஆண்டு ஜனவரி 01ஆம் திகதியில் தொகுதி1 மற்றும் தொகுதி2 என 104 கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள 7,228,104,572 ரூபா தொகையில் 5,539,965,503 ரூபாவானது அதாவது நூற்றுக்கு 76.64 சதவீத முதலீடானது 22 கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புரை

இந்த 22 கம்பனிகளில் செய்யப்பட்டுள்ள மொத்த முதலீடுகளிற்கு பெற்ற வருமான வீதம் நூற்றுக்கு 4.28 என்பதுடன் 6 கம்பனிகளைத் தவிர ஏனைய 16 கம்பனிகளின் நிதிக்கு பெற்றுக்கொண்ட நூற்றுக்கு 0.17 சதவீதத்திலிருந்து நூற்றுக்கு 4.28 சதவீதம் வரையான மிகவும் குறைந்த வருமான வீதமாகும். ‘‘மூலதன இலாபம் பெற்றுக்கொள்ள முடியாததன் காரணமாக பெற்றுக்கொள்ளக் கூடிய வருமான வீதம் குறைந்துள்ளது’’ என சபைத் தலைவரின் பதிலில் தெரிவக்கப்பட்டது.

(இ) இரண்டு கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்ட தொகுதிக்கடன் மற்றும் வாக்குறுதிப் பத்திரங்கள் தொடர்பில் 10 வருடங்களிற்கு முன்பிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய முதலீட்டு வட்டி 27,854,580 ரூபாவினை அறவீடு செய்வதற்கு 2013 ஜுன் 30ஆம் திகதி வரை சபை நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. ‘‘ஒரு கம்பனி நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்ததனாலும் மற்றும் அடுத்த கம்பனிக்கு எதிராக நடாத்தப்படும் நீதிமன்றச் செயற்பாடுகள் காரணமாகவும் இந்நிதியினை அறவிட முடியவில்லை’’ என சபைத் தலைவரின் பதிலில் தெரிவக்கப்பட்டது.

(ஈ) சபை ஏதோவொரு கூறு பொறுப்பு நிதியத்தினை 1997ஆம் ஆண்டிலே கொள்வனவு செய்யப்பட்ட 1,000,000 கூறுகளிற்காக முதலீடு செய்த 10,000,000 ரூபாவாகும். இக்கூறுகளை கொள்வனவு செய்யப்பட்ட தினத்திலிருந்து மீளாய்வாண்டு வரை அம்முதலீடுகளினால் எவ்விதமான இலாபமும் சபைக்கு கிடைக்கவில்லை. எப்படியாயினும் 2012ஆம் ஆண்டளவில் இம்முதலீட்டினை திறைசேரி உண்டியலில் முதலீடு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய இலாபத்துடன் கணிப்பீடு செய்தால் 1,169,000 ரூபா இழப்பு ஏற்படக் கூடிய வாய்ப்புண்டு.

## 4.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிய தேவைகளை அறிந்து கொண்டு கொள்வனவு செய்யாததன் காரணமாக 2012ஆம் வருட முடிவில் பாவிக்கப்படாத களஞ்சியத்திற்கு முன்னால் வைக்கப்பட்ட சீருடைகளின் பெறுமதி 2,183,775 ரூபாவாகும். 2008ஆம் ஆண்டிலிருந்து காணப்படும் இச்சீருடைகளை மீளாய்வாண்டுவரை அகற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ஆ) 1998ஆம் ஆண்டிலே 2,090,600 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்ட வாகனமொன்று அரச மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளாது பகிரங்க ஏலவிற்பனையில் 832,000 ரூபாவிற்கு விற்கப்பட்டுள்ளது. இவ்வாகனமானது விற்கப்படும் வேளையில் தனியார் மதிப்பீட்டுக் கம்பனியால் மதிப்பீடு செய்யப்பட்டதன்படி அதன் சந்தை விலையானது 1,300,000 ரூபாவாக உத்தேசிக்கப்பட்டிருந்துது.

### 4.3 முகாமைத்துவ வினைத்திறனின்மை

ஏதோவொரு கம்பனியொன்றுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை மீறப்பட்டதையடுத்து நீதிமன்றத் தீர்ப்பு மூலம் குறித்த முறைப்பாட்டுக்காரரான கம்பனிக்கு செலுத்தப்பட்ட 21,900,000 ரூபா தொடர்பாக மேன்முறையீட்டின் விளைவாக அக்கம்பனியால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வங்கிப் பிணைமுறியின் பெறுமதி சபைக்கு மீண்டும் கிடைக்க வேண்டிய தொகையானது கணக்கில் வைக்கப்பட வேண்டும். இந் நீதிமன்றச் செயற்பாடுகள் 2013 ஜுன் 30ஆம் திகதி வரை முடிவடையாதுள்ளதுடன் இத்தொகையைச் செலுத்திய நட்டம் உள்ளடங்கலாக நீதிமன்றச் செயற்பாடுகள் இடம்பெற்றதன் காரணமாக இத்தொகை மீண்டும் பெற்றுக்கொள்வதில் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது.

### 4.4 இனம் காணப்பட்ட இழப்பு

2009 ஜுன் மாதத்திலே 4,473,200 ரூபா செலுத்தி கொள்வனவு செய்யப்பட்ட 3 ஒரே ரக வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 3 வருட கால எல்லைக்குள் தனியார் மதிப்பீட்டு நிறுவனத்தால் 1,900,000 ரூபாவிற்கு மதிப்பிடப்பட்டு 1,901,000 ரூபாவிற்கு கோரம் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இவ்விற்பனையால் 363,590 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

### 4.5 நோக்கங்களிற்கு முரணான செலவினம்

திறைசேரியின் அனுமதியிலிருந்து விலகி சபையின் நோக்கங்களிற்கு முரணாக சபை உத்தியோகத்தர்களால் நடாத்தப்படும் விளையாட்டுக் கழகத்திற்காக 2,000,000 ரூபா கடன்தொகை எவ்வித உடன்படிக்கையும் இல்லாமல் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டுள்ளது.

### 4.6 அனுமதியற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபையின் கடையும் அலுவலக உத்தியோகத்தர்களின் கீழ் செயற்படும் நிறுவனத்திற்காக மேலதிக நேர வேலைக்கு ஒரு மணித்தியாலத்திற்கு ஒன்றரை மணித்தியாலமாகவும் சனிக்கிழமை/ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரச விடுமுறை தினங்களிலும் மேலதிக 8 மணித்தியாலங்கள் பூர்த்தி செய்திருப்பின் நாட் சம்பளத்தையும் சேர்த்து வழங்குவதால் சபையின் 2012ஆம் ஆண்டின் மேலதிக செலவு 16,986,225 ரூபாவாகும். சட்டத்தின்படி இவ்வாறான மேலதிக கொடுப்பனவு பெற்றுக் கொள்வதற்கு சபையின் உத்தியோகத்தர்கள் வாரத்திற்கு ஐந்தரை நாட்கள் சேவை புரிய வேண்டுமென்பதுடன் 21 வருடாந்த விடுமுறை நாட்களிற்கு மேற்படலாகாதென்பதுடன் இதற்கு முரணாக 42 வருடாந்த விடுமுறைகள் பெற்றுக்கொண்டுள்ளோரும் வாரத்தில் 5 நாட்கள் சேவை புரிந்தவர்களும் மேலதிக கொடுப்பனவு பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

### 4.7 வேறு அரச நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்

2003 ஆண்டு ஜுன் 6ஆம் திகதியிடப்பட்ட பீஈ/டீ12 பொது முயற்சி சுற்றறிக்கையின் 8.3.9ஆம் பிரிவினதும் நி.பி 502(2)II ஆம் பின்னிணைப்பின் 9ஆம் அட்டவணைக்கு முரணான முறையில் சபைக்குச் சொந்தமான 6,189,922 ரூபா பெறுமதியான பீபீ – 1089 இலக்கமுயை கெப்ரக வாகனமொன்று ஜனாதிபதி செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாகனத் திருத்தத்திற்காகவும் பராமரிப்பிற்குமாகவும் சபையால் 384,578 ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது. இவ்வாகனத் திருத்தச் செலவாக கடந்த வருடத்திலேயும் 646,868 ரூபா செலவிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் உள்ள இவ்வாகனத்தின் திருத்தச் செலவாக 646,868 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

### 4.8 ஊழியர் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு தொடர்பாக நிதியம் ஒன்றை நிறுவுதல்

மீளாய்வாண்டின் முடிவிலே 90,119,163 ரூபாவினை பணிக்கொடைக்காக ஒதுக்கி வேறு நிதியாக முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 4.9 வாகனப் பாவனை

மீளாய்வாண்டிலே சபையின் 2 வாகனங்கள் விபத்திற்குட்பட்டதுடன் ஏற்பட்ட 214,665 ரூபா இழப்பினை விபத்துக் காப்புறுதி மூலமாகவோ அல்லது அவ்விபத்துக்களிற்கு பொறுப்பானவர்களிடமிருந்தோ அறவிடுவதற்கு நபை நடவடிக்கை எடுக்காததுடன் விபத்து ஏற்பட்ட மேலும் 3 வாகனங்கள் தொடர்பாக செலவின மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை.

## 5 கணக்கியல் செயற்பாடு மற்றும் சிறந்த நிர்வாகம்

### 5.1 யாக்கத் திட்டம்

தலைமை அலுவலகக் கட்டிடத் தொகுதிக்காக செலவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செலவினத்தினதும் கொள்வனவு செய்தல் மற்றும் யாக்கத் திட்டத்தின் மொத்தச் செலவுகளினதும் வேறுபாடு நூற்றுக்கு 50 சதவீதமளவிலாகும். ஆதலால் எதிர்காலத்தில் நிதிப் பாய்ச்சல் தொடர்பில் செய்யப்படும் இவ்வாறான திட்டங்கள் பயனற்றது என அவதானிக்கப்பட்டுள்ளது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

நி.பி 133(2) இன் பிரகாரம் சபையின் சகல களங்களும் உள்ளடக்கப்படும் விதத்தில் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் செயற்படுத்தப்படவில்லை.

### 5.3 வரவு செலவுப் பேரேடு பராமரிப்பு

சபையின் வரவு செலவுகளை மற்றும் துல்லியமான செலவுகளுடன் ஒப்பிடுகையில் கவனிக்கத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதன் காரணமாக வரவு செலவுப் பேரேட்டினை பயனுள்ள முகாமைத்துவ நிர்வாக செயற்பாடாக ஏற்றுக்கொண்டு மேலும் கவனம் செலுத்த வேண்டும்.

## 6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீதான குறைபாடுகள் சபைத் தலைவரிடம் அவ்வப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. கீழே தரப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு

(ஆ) அறவிடப்பட வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகை

(இ) காலத்திற்கேற்ப சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள்

(ஈ) முதலீடு

ஒப்பம்: எச். ஏ. எஸ். சமரவீர
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பாக சபையின் விளக்கம்

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.2 நிதிக்கூற்றுக்கள் பற்றி கருத்துரைகள் தெரிவித்தல்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

சபையினால் சொத்துக்களையும் உடைமைகளையும் ஒழுங்குமுறையான நிர்வாகச் செயற்பாட்டில் பராமரிப்பதற்கும் இயந்திரங்கள், சொத்துக்கள் மற்றும் உடைமைகளை மீள்மதிப்பீடு செய்வதற்கும் ஏற்படும் மொத்தச் செலவுகளை மீள்மதிப்பீட்டில் பெறப்படும் பயன்களின் ஒருங்கிசைவானது பொருளாதார ரீதியில் ஆக்கபூர்வமற்ற கொடுக்கல்வாங்கல் என்பது எமது எண்ணமாகும். அதேபோல இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இயந்திரங்கள், சொத்துக்கள் மற்றும் உடைமைகள் ஆகியவற்றின் மீள்மதிப்பீடு இலங்கை கணக்கீட்டு நியமத்தின் நிதி அறிக்கைக்காக ஓரளவு பாதிப்பு ஏற்பட்டுள்ள கொடுக்கல்வாங்கலிற்காக மட்டும் செய்யப்படுவதன் காரணமாகவும் மற்றும் சபையினால் பாவிக்கப்படுகிற சொத்துக்கள் மற்றும் உடைமைகளின் சாதாரண பெறுமதி நாளாந்தம் மாறுபடாதென நாம் அவதானித்துள்ளதன் காரணமாகவும் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16இன் 34ஆம் பிரிவில் உள்ளவாறு இவ்வாறான சொத்துக்களின் மீள்மதிப்பீடானது உடனடியாக மேற்கொள்வது அவசியமாகாதென தோன்றுகின்றது.

#### 2.2.2 அங்கத்துவக் கணக்குகளில் வரவு வைக்கப்படாத பங்களிப்புப் பணம்

குறித்து வைக்கப்படும்

#### 2.2.3 பெற்றுக்கொள்ள வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

(அ) குறித்து வைக்கப்படும்

(ஆ) குறித்து வைக்கப்படும்

(இ) இத்தொகையானது குறிப்பிட்ட உத்தியோகத்தரிடமிருந்து மாதாந்தத் தவணை முறையில் அறவிடப்படும்.

(ஈ) சேவையிலிருந்து விலகிச் சென்ற ஊழியர்களிடமிருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவைப்பணமானது அந் ஊழியாகளிடமிருந்தும் மற்றும் அக்கடன்களிற்கான பிணையாளர்களிடமிருந்தும் அறவிடப்படும்.

(உ) பதிவு செய்து வைக்கப்படும்

#### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கபாடின்மை

(அ) கணக்காய்வு விசாரணையில் குறிப்பட்டபடி குறித்த எரிபொருள் செலவினம் 09 உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பிரயாணத்திற்கான செலவாகாது என்பதுடன் குறித்த வருடத்தினுள் இவ் உத்தியோகத்தர்களின் மொத்த வாகனப்பாவனைக்கான செலவழிக்கப்பட்ட தொகையாகும்.

நிதி அமைச்சின் அரச தொழில் திணைக்களத்தின் 2008 யூலை 28ஆம் திகதியிடப்பட்ட 50ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களிற்கமைய சபை உத்தியோகத்தர்களின் அரச கடமைகளிற்காக வாகனங்களை பாவிக்கப்படுகின்றன.

அச்சுற்றறிக்கையின்படி உத்தியோகத்தர்களுக்கு கீழே தரப்பட்டுள்ள முறையில் எரிபொருட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

| | பெற்றோல் ரூபா | டீசல் ரூபா |
|---|---|---|
| தலைவர் | 20,000 | 14,000 |
| நிறைவேற்றுப் பணிப்பாளர் / பொதுமுகாமையாளர் | 18,000 | 12,000 |
| பிரதிப் பொதுமுகாமையாளர் | 15,000 | 10,000 |
| இவ்வசதிகளிற்கு உட்படாத வேறு உத்தியோகத்தர்கள் (உதவிப் பொதுமுகாமையாளர்கள்) | 12,500 | 8,000 |

குறித்த உத்தியோகத்தர்களால் இம்மாதாந்தக் கொடுப்பனவை விட அதிகமாக பாவிக்கப்படும் வேளைகளில் அம் மேலதிகச் செலவினங்கள் குறித்த உத்தியோகத்தர்களின் மாதாந்த வேதனத்தில் அறவிடப்பட நேரிடுகின்றது.

(ஆ) அவ்வேளையில் கடைப்பிக்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி சபையினால் வழங்கப்படுகின்ற கடனிற்கான வட்டிவீதத்தை 4.2% ஆகக் குறைப்பதற்கு 1998.01.20ஆம் திகதி பணிப்பாளர் சபை அனுமதியளித்தது. பணிப்பாளர் சபையின் அவ்வனுமதியுடன் சபை ஊழியர்களுக்காக 4.2% வட்டிவீதத்தில் கடன் வழங்குவதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. அதேபோல மேற்குறித்த வட்டிவீதத்தில் வழங்கப்பட்டுள்ள கடன் நிலுவைகள் வட்டியுடன் சபையின் ஊழியர்களின் மாதாந்த வேதனத்திலிருந்து அறவிடப்படுகின்றது.

(இ) (i) பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் 2007ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்திலிருந்து ஊழியர் வருமானத்திலிருந்து செலுத்த வேண்டிய ஈட்டு வரியானது சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(ii) நலன்புரிச் செயற்பாடுகளிற்கென முக்கியமான செலவுகளான வருடாந்தம் வழங்கும் சீருடைகள் மற்றும் காலை/மாலை தேநீர் வழங்குவதற்காக செய்யப்படுகின்ற செலவினமாகும். சாதாரணமான ஊழியர் நலன்புரி செயற்பாடுகளாகக் கருதி தேநீர் வழங்குவதை முன்னிட்டு சபை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டதுடன் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் சபையின் நிதி அதிகார எல்லைக்குள் சீருடைகள் வழங்குதல் 1993ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதன்படி மீளாய்வாண்டிலே சபையினால் பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்று இவ்வசதிகளை வழங்குகின்றது.

(ஈ) 2012ஆம் ஆண்டு ஊழியர்களுக்கு மிகையூதியம் வழங்கப்பட்டது கணக்காய்வு விசாரணையில் குறிப்பிட்டபடி 2011 டிசம்பர் 22ஆம் திகதியிடப்பட 47ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரமல்லாது 2012 டிசம்பர் 24ஆம் திகதியிடப்பட 49ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரமேயாகும். அதுபோல அச்சுற்றறிக்கையிலுள்ள விதிகளிற்கு புறம்பாக மிகையூதியக் கொடுப்பனவு வழங்குவதற்கு மட்டுமே அச்சுற்றறிக்கையின் 3.4 இற்கமைய அமைச்சரவையின் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அச்சுற்றறிக்கையின் பிரிவு 1.1 இற்கமையவும் 2011ஆம் ஆண்டில் செலுத்திய அடிப்படையில் பணிப்பாளர் சபையின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டதாலும் சபையினால் மீளாய்வாண்டிலே ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

(உ) 2011ஆம் 2012ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வாகன விபத்துக்கள் தொடர்பான இழப்புக்கள் பற்றிய அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாதிருத்தல்**

2012ஆம் ஆண்டிற்கான நிலையான சொத்தினை பௌதீக ரீதியாக உறுதிப்படுத்துவதற்கான பொருட் கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.2.6 போதியளவு அதிகாரம் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

(அ) இந் நிதிச் செயற்பாட்டு நடவடிக்கை முறைமைக் கையேட்டின் கொள்வனவு நடைமுறைகள் (Procurement Procedure) தொடர்பாக பகுதியளவிற்கு பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொண்டதுடன் எஞ்சிய பகுதிக்கு வரைவு அறிக்கை தயார் செய்யப்பட்டு முடிவடைந்துள்ளதுடன் எந்த எஞ்சியவற்றுக்கு பணிப்பாளர் சபையிடம் அனுமதியுடன் நிதி அமைச்சின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும்.

(ஆ) சபையின் ஊழியர்களுக்கு 1993 இலிருந்து வருடந்தோறும் சீருடைகள் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. இச்செயற்பாடு பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்று மேற்கொள்ளப்படுகின்றது. இச்செயற்பாட்டை பின்பற்றி 2012ஆம் ஆண்டிற்காகவும் ஊழியர்களுக்கு சீருடைகள் வழங்கப்படுகின்றன. பணிப்பாளர் சபை இதை ஊழியர் சாதாரண நலன்புரி செயற்பாடாகக் கருதி அனுமதியளித்துள்ளது.

# 3 நிதி மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

செயற்றிறன் மிக்க முதலீட்டு வழிமுறைகள் மூலம் மீளாய்வாண்டிலே வட்டி மற்றும் பங்கு இலாபத்தினை அதிகரிக்க முடியும் என்பதுடன் புதிய கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக சபையின் கணக்கினைத் தயாரிக்கும்போது சொத்துக்களின் நிகர தற்காலப் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்படும். அதன்படி சபையின் வருமானமானது 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2012ஆம் ஆண்டில் 840,727,502 ரூபாவிற்கு அதிகரிப்படைந்துள்ளது.

## 3.2 பகுப்பாய்வு நிதிசார் விளைவுகள்

(அ) இந்த அவதானிப்புடன் இணங்குகின்றோம்.

(ஆ) இந்த அவதானிப்புடன் இணங்குகின்றோம்.

# 4 செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயற்றிறன்

**4.1.1 செயற்பாட்டு வினைத்திறன்**

(அ) ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிந்துள்ள எல்லா தொழில் வழங்குநர்கள், தனியார் சேமலாப நிதியங்களைப் பேணும் தொழில் வழங்குநர்கள் மாதாந்தம் தமது ஊழியர்களின் பொருட்டு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையிடம் பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும். கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் 227,612 தொழில் வழங்குநர்கள் இருந்தபோதிலும் அவர்களிடம் சில ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டிருப்பின் மட்டுமே இந்நிதியத்தில் அத்தொழில் வழங்குநர்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும். அதன்படி 2013 யூலை மாத முடிவில் 71,444 அளவிலான தொழில் வழங்குநர்கள் இந்நிதியத்தில் மாதாந்தம் பங்களிப்புச் செய்கின்றனர்.

இலங்கை முழுவதும் உள்ள எமது பிரதேச அலுவலக வலைப்பின்னலை உபயோகித்து சுயதொழிலில் ஈடுபட்டுள்ளோர்களை இச்சபையில் இணைக்கும் முறைமையான செயற்றிட்டமொன்று செயற்படுத்தப்பட்டு வருகின்றது. விசேடமாக இலங்கை சமுர்த்தி அதிகார சபை மற்றும் மில்கோ நிறுவனத்துடன் இணைந்து செயற்படும் சகல சுயதொழிலில் ஈடுபட்டுள்ளோர்களையும் இந்நிதியத்தில் பங்களிப்புச் செய்து கொள்வதற்கு விசேட செயற்றிட்டம் செயற்படுத்தப்படுகின்றது. அதன்படி இவ்வருட முடிவில் சுயதொழில் முயற்சியாளர்களின் அங்கத்துவத்தில் விசேட வளர்ச்சியொன்று எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் சுயதொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்நிதியத்தில் இணைத்துக் கொள்வதில் தமது சுயவிருப்பத்தில் பங்களிப்புச் செலுத்த வேண்டியிருப்பதால் வளர்ச்சிக்கு தடையாகவுள்ளது.

(ஆ) இந்நிதியத்தில் தற்போது அங்கத்தவர்களின் எண்ணிக்கை 22 இலட்சத்தை தாண்டியுள்ளது. சபை எல்லா அங்கத்தவர்களினதும் குடும்ப உறுப்பினர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக பயனுள்ள திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டாலும் அதற்கான செலவுத்தொகையானது மிகப் பெருமளவிலானதாகும். அம்முறையில் பெருமளவு செலவு செய்வதற்கு சபைக்கு இயலாதுள்ளது.

1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்கக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரகாரம் வருட முடிவிலே சகல அங்கத்தர்வர்களினதும் கணக்குகளிற்கு பங்கு இலாபத்தினையும் வட்டியையும் வரவு வைப்பதற்கு சபை கட்டுப்பட்டுள்ளது. முதலீடு செய்வதற்குப் போதிய நிதி இருந்தாலே இப்பாரிய தொகை வட்டியையும் பங்கு இலாபத்தினையும் வழங்க முடியும். ஆகவே தற்போதைய நிலைமையை அடிப்படையாகக் கொண்டு அங்கத்தவர்கள் பயனடைவதற்காக தற்போது சபை செயற்படுத்தும் வேலைத்திட்டங்களை தொடர்ந்து செய்வது நியாயமானதென குறிப்பிட்டுக்கொள்ள முடியும்.

### 4.1.2 முதலீடுகளும் முதலீட்டு வருமானமும்

(அ) குறுகிய கால ரீப்போ முதலீடு

அந்த அரச வங்கி மூலம் சபைக்கு வழங்கப்படுகின்ற தனிப்பட்ட விசேட செயற்பாட்டிற்காக நிபந்தனையொன்றுடன் 500 மில்லியன் ரூபா வைப்பினை 12 மாதங்களிற்கு திறைசேரி உண்டியலின் வட்டியிலும் 0.25% குறைவான வீதத்தில் முதலீடு செய்வதற்கு இணக்கம் காணப்பட்டது.

எவ்வாறாயினும் 2013ஆம் ஆண்டிலிருந்து அந்த 500 மில்லியன் ரூபா முதலீடானது ஒரு வருடத்திற்கு நிலையான வைப்பாக புதுப்பிக்கப்பட்டதுடன் அன்றைய தினம் பேணப்படும் நிலையான வைப்பிற்கான வட்டி வீதத்தில் வட்டி வழங்குவதற்கு அக்குறிப்பிட்ட வங்கியால் சபைக்கு வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

அதன்படி தற்போது காணப்படும் அந்த முதலீட்டு விபரம் பின்வருமாறு

| முதலீடு புதுப்பிக்கப்பட்ட தினம் | முதிர்வடைந்த திகதி | தொகை (ரூபா) | வருடாந்த வட்டி வீதம் (%) |
|---|---|---|---|
| 19.03.2013 | 19.03.2014 | 10,000,000 | 15.0 |
| 19.08.2013 | 19.08.2014 | 490,000,000 | 12.0 |
| மொத்தம் | | 500,000,000 | |

(ஆ) பங்குச் சந்தை முதலீடுகள்

(i) 2013ஆம் ஆண்டு ஜுன் 30ஆம் திகதி பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டுள்ள பணம் (திவாலாகப்பட்டுள்ள மற்றும் பட்டியலிலிருந்து அகற்றப்பட்ட கம்பனிகள் தவிர) 7,984,,499,597.37 ரூபா என்பதுடன் அதன் பங்குச்சந்தைப் பெறுமதி 6,767,995,192.40 ரூபாவாகும். ஆதலால் உண்மைநிலை நட்டமாக 1,216,504,404.97 ரூபாவாகும். 2010ஆம் 2011ஆம் ஆண்டுகளிலே பங்குச்சந்தையிலே காணப்பட்ட அனுகூலமான நிலைமை காரணமாக பங்குச்சந்தையில் மிகவும் வலிமைமிக்க கொள்வனவுகளும் விற்பனைகளும் செய்யப்பட்டன. ஆனால் 2011ஆம் 2012ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது 2012ஆம் 2013ஆம் ஆண்டுகளில் பங்குச்சந்தையில் ஏற்பட்டுள்ள இறக்கம் காரணமாக முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளிற்கான மொத்தச் செலவு சந்தைப் பெறுமதியைவிட அதிகமாகும். இதுவொரு தற்காலிக நிலைமை என்பதுடன் பங்குச்சந்தையில் விலை கூடும்போது உண்மைநிலையான நட்டம் குறைவடையும்.

(ii) பங்குச் சந்தையிலே முதலீடு செய்வது பயன்மிக்கது. அவ்வாறே மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டுமென்பதுடன் நீண்ட காலப் பயனையே கருத்திற்கொள்ள வேண்டும். முதலீட்டினால் உயர் இலாபத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக அந்நிய முதலீட்டாளர்களின் நம்பிக்கையுடன் அபிவிருத்திச் சந்தை நாட்டிற்கு தேவை என்னும் காரணத்தினால் பங்குச்சந்தை செயற்பாட்டில் பங்குபற்றுவது முக்கிய பொறுப்பு வாய்ந்த முக்கிய முதலீட்டாளர்களாக சபை அறிமுகமாகியுள்ளது. அதன்படி முழு முதலீட்டில் 06% வீத பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு தீர்மானித்தள்ளதுடன் பங்குச் சந்தையில் விலை உயரும் வேளைகளில் உயர் பயனை அடைய முடியும்.

(iii) பங்கு முதலீட்டில் உயர் இலாபம் அல்லது எதிர்பாராத நட்டம் ஏற்பட வாய்ப்பு அதிகம் உள்ளதனால் பல கம்பனிகளில் முதலீடு செய்து பங்கு முதலீட்டை பரவாலாக்கல் (diversification) மூலம் நட்ட அபாயம் குறைக்கப்பட்டுள்ளது. எல்லாக் கம்பனிகளிலும் இலாபத்தை எதிர்பார்க்க முடியாது.

(iv) இந்த அவதானிப்புடன் இணங்குகின்றோம்.

(v) பர்ஸ்ட் கெப்பிற்ல் ரெஷறீஸ், பிச்ரேடிங் கம்பனி மற்றும் லங்கா சோல்ற் கம்பனி ஆகியவை தங்களால் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் ஆகும். பர்ஸ்ட் கெப்பிற்ல் ரெஷறீஸ் கம்பனியின் பங்குகளிற்காக 2012/13ஆம் 2013/14ஆம் வருடங்களிற்காக முறையே 8.7 மில்லியன் ரூபாவும் 16.2 மில்லியன் ரூபாவும் பங்கு இலாபமாகப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் இதுவரை அம்முதலீட்டினால் மிகப்பெரிய இலாபமாக 174.8 மில்லியன் ருபா பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 2010ஆம் ஆண்டிலே அக்கம்பனியின் பங்குகளை விற்று 30 மில்லியன் ரூபா மூலதன இலாபத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. பிச் ரேடிங் கம்பனியால் ஏனைய கம்பனிகளுடன் ஒப்பிடுகையில் 2011ஆம் 2012ஆம் ஆண்டு திருப்தியான பங்கு இலாப வீதத்தினை தந்தள்ளது. லங்கா சோல்ட் கம்பனியின் 2012ஆம் வருட முடிவில் நிகர சொத்துப் பெறுமதி 686 மில்லியன் ரூபாவரை அதிகரித்துள்ளதுடன் அம்முதலீட்டுத் தொகையான 470 மில்லியன் ரூபாவிற்கு 216 மில்லியன் ரூபா அதிகரித்ததன் காரணமாக அம்முதலீட்டினை அறவீடு செய்யாதிருப்பதென்பது எமது எண்ணமாகும். மேலும் தேசிய பொருளாதாரத்தில் இக்கம்பனியின் முக்கியத்துவத்தைக் கருதி இம்முதலீடு மேற்கொள்ளப்படும்.

(vi) சபைக்கு 2002ஆம் ஆண்டு முதலீட்டுக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 2006ஆம் 2012ஆம் ஆண்டுகளில் விரிவாகத் தயாரிக்கப்பட்டன. இம் முதலீட்டுக் கொள்கையானது முதலீடு மற்றும் நிதிச் செயற்பாடுகளில் நீண்டகால அனுபவமுடைய தொழில்தகுநிலைகளுடனும் தொழில் நிபுணத்துவத்துடனும் உள்ள செயற்றிறன்மிக்க பணிப்பாளர்களைக் கொண்ட சபையின் அனுமதியைப் பெற்றுள்ளது. இம் முதலீட்டுக்

கொள்கை கூற்றினால் முதலீடுட்டில் கொள்வனவு செய்யும்போதும் விற்பனை செய்யும்போதும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றைச் செயற்படுத்துவதற்காக அலுவலக ஆளணியினருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இறுதியில் இச்சகல முதலீட்டுக் கொடுக்கல்வாங்கல்கள் உயர் முகாமைத்துவத்தில் அதாவது மேலதிகப் பொதுமுகாமையாளர், தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை ஆகியோரின் அனுமதியின் கீழ் மேற்கொள்ளப்படும்.

(vii) திவாலாக்கப்பட்டுள்ள கொரியா சிலோன் புட்வெயார் கம்பனியின் வழக்கானது மீண்டும் நடைபெறும் திகதி 2014.04.25ஆம் திகதி என்பதுடன் மெக்பெக் கம்பனியின் நீதிமன்ற ஆணைக்கு எதிரான மேன்முறையீடு இதுவரை நடைபெறவில்லை. வியாங்கொடை ரென்ஸ்ரைல்ஸ் ஆனது பங்குச் சந்தையிலிருந்து கம்பனிப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான மேலதிகத் தகவல்களை விசாரணை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

(viii) சியாரா கேபிள்ஸ், றயிகம் வயம்ப, ஹோட்ல் சர்விசஸ், டயலொக், லங்கா ஐஓசீ மற்றும் ரிச்சர்ட் பீரிஸ் எக்ஸ்போர்ட் ஆகிய 06 கம்பனிகள் தங்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் லங்கா ஐஓசீ கம்பனியின் பங்குகள் எல்லாம் 2013ஆம் ஆண்டிலே விற்கப்பட்டு மூலதன இலாபம் பெற்றுக் கொள்ளப்பட்டது. ஏனைய கம்பனிப் பங்குகள் எதிர்காலத்தில் விற்பனை செய்யப்பட்டு மூலதன இலாபத்தில் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்து.

(ix) 4.1.2(அ)II இற்கான பதில் இதற்குப் பொருந்தும்.

(x) இங்கு நீங்கள் குறிப்பிட்டுள்ள சகல கம்பனிப் பங்குகளிற்கான பங்கு இலாபம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் ஆனால் பங்குச்சந்தையில் கம்பனிப் பங்குகளிற்கான விலைகள் இறக்க நிலையிலுள்ளதால் மூலதன இலாபத்தினைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதன் காரணமாக பெற்றுக்கொண்ட வருமான வீதம் குறைவாகக் காணப்பட்டுள்து. பங்குச் சந்தையின் தன்மைப்படி இலாப நட்டம் இரண்டும் ஏற்படும். எவ்வாறாயினும் பங்குச் சந்தையில் ஏற்றம் ஏற்பட்ட பின்னர் இக்கம்பனிகளின் மூலதன இலாபத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(இ) இந்த அவதானிப்புடன் இணங்குகின்றோம்.

(ஈ) 1997ஆம் ஆண்டிலே Namal Growth Fund இல் 2,500,000 கூறுகள் 10 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்பட்டன. அவற்றுள் 1,500,000 கூறுகள் 2006ஆம், 2007ஆம் மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் விற்பனை செய்யப்பட்டு 33,183,600 ரூபா மூலதன இலாபம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் 1999ஆம் 2001ஆம் ஆண்டுகளில் பங்கு இலாபம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இக்கூறுகளில் பெற்றுக்கொள்ளக் கூடிய மூலதனப் பயன்கள் ஆனது அக் கூறுகளை விற்பனை செய்து பெற்றுக்கொள்ளக் கூடிய மூலதன இலாபமாகும். 10 ரூபாவிற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட இக்கூறுகள் தற்போது 96/93 ரூபாவாகியதுடன் கூறிற்கு உண்மைநிலை இலாபம் 86/93 ரூபாவாகும்.

இக்கூறுகள் தேவைப்படும் வேளைகளில் அன்றைய தினம் காணப்படும் விற்பனை விலைக்கு தேவையான அளவு விற்பனை செய்ய முடியும்.

## 4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

(அ) புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஊழியர்களின் தேவையையும் கவனத்திற் கொண்டு சீருடைகளிற்கு கொள்முதல் ஆணைச் செயற்பாடுகள் சபையினால்

2010ஆம் வரை செயற்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு காரணங்களால் இப்புதிய ஆடசேர்ப்பு எதிர்பார்க்கப்பட்ட முறையில் நடைபெறாததன் நிமித்தம் இவ்வாறான மிகையளவு தொகை எஞ்சியுள்ளது. இது 1993ஆம் ஆண்டிலிருந்து 2010ஆம் ஆண்டு வரையான எஞ்சியுள்ள மொத்தத் தொகையின் பெறுமதியாகும்.

இவ் எஞ்சிய சீருடைத் தொகையை அகற்றுவதற்காக உள்ளக ஊழியர்களிடம் விலைமனு கோரப்பட்டுள்ளதுடன் அதற்கான அனுகூலமான பதில் கிடைக்கவில்லை. ஆதலால் மீண்டும் பகிரங்க விலைமனுக் கோரல் கோரப்பட்டு விரைவாக எஞ்சியுள்ள சீருடைத் தொகை அகற்றுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும் 2011ஆம் ஆண்டின் பின்னர் தேவையான சரியான எண்ணிக்கையை அடையாளம் கண்டபின்னர் மட்டும் சீருடை கொள்வனவு ஆணை செய்யப்பட்டதன் நிமித்தம் இவ்வாறான மிகையளவு எஞ்சியதல்ல.

(ஆ) 300-8679 இலக்க பேஜோ வாகனம்

300-8679 இலக்க பேஜோரக வாகனம் 14 வருடங்கள் அளவில் (1998ஆம் ஆண்டிலிருந்து) பாவிக்கப்பட்ட காரொன்று விற்பனை செய்வதற்கு சபையின் ஊழியர்களிடம் விலைமனு கேட்கப்பட்டுள்ளதுடன் அவ்வேளையில் வாகனம் ஓடக்கூடிய நிலையில் இருந்தது. விற்பனை விலையை பரிசோதித்து பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்றுக் கொண்ட பின்னர் வாகனமானது ஓட்டக்கூடிய நிலைப்பாட்டில் இல்லாததுடன் அதை நிறுத்தி வைப்பதற்கான நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக விண்ணப்பம் செய்த 08 விண்ணப்பதாரர்கள் தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விற்பனை விலையை எழுத்து மூலம் திரும்பப் பெற்றுக்கொண்டனர். 09ஆவது நபரின் விற்பனைப் பெறுமதியானது நிலையத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியிலும் பார்க்க மிகவும் குறைவாகக் காணப்பட்டதன் காரணமாக பணிப்பாளர் சபையின் வேண்டுகோளின்படி இக்காரினை அகற்றுவதற்காக பகிரங்க பத்திரிகை விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்டது. அதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உயர் விற்பனை விலைக்கு வாகனத்தை அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதுவரை 03 மாதங்கள் அளவில் வாகனம் ஓட்டப்படாது இருந்ததுடன் சேதமடையும் நிலைக்கு உருவானது. வாகனத்தின் தேய்மான கழிக்கப்பட்டு நிகரப் பெறுமதியானது குறைவடைவதன் காரணமாகவும் ஓட்டுவதற்கு தகுதியற்ற வாகனத்தை மேலும் வைத்திருந்து ஏற்படும் நட்டத்தை குறைப்பதற்காகவும் விற்பனை விலை 832,000 ரூபாவில் இக்கார் அகற்றப்பட்டது.

## 4.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

மத்துரட்ட பெருந்தோட்டக் கம்பனியின் 10,200,000 பங்குகள் 478 மில்லியன் ரூபாவிற்கு 1997.06.19ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டு 1998.04.17ஆம் திகதி விற்பனை செய்ததில் மிகக் குறுகிய காலத்தில் 256.4 மில்லியன் ரூபா மூலதன இலாபத்தினைப் பெற்றுக்கொள்ளக் கூடியததாக இருந்ததன் நிமித்தம் இக் கொடுக்கல்வாங்கல் செயற்பாடு வினைத்திறனற்றது இல்லையென எமது கருத்தாகும்.

எவ்வாறாயினும் 56/98(1) இலக்கமுடைய சமர்வில கம்பனியுடன் உள்ள வழக்குத் தொடர்பாக நீதிமன்ற ஆணைக்கு எதிராக சபையினால் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதுடன் மேன்முறையீட்டு நீதிமன்ற ஆணையின் பிரகாரம் மேற்குறித்த கம்பனியால் 21.9 மில்லியன் ரூபா பெறுமதியான வங்கிப் பிணைமுறி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சபையினால் தாக்கல் செய்யப்பட்ட உயர்நீதிமன்ற வழக்கு SC/CHC/20/2003 இலக்கமுடைய வழக்கு 2014.09.22ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு குறிக்கப்பட்டுள்ளது.

## 4.4 இனம் காணப்பட்ட இழப்பு

கணக்காய்வு விசாரணையில் குறிப்பிட்டுள்ள இந்த 3 ஒரே வாகனங்களும் தினந்தோறும் தொழினுட்பக் கோளாறுகளிற்கு உட்படுவது மற்றும் அதிக எரிபொருட்களை வீணாக்குவது போன்ற காரணங்களால் ஏற்படும் அதிக பராமரிப்புச் செலவு காரணமாக விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்படி அவ்வாகனங்கள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான லங்கா ஓட்டோமொபைல் கம்பனி மூலம்

பரிசோதிக்கப்பட்டும் மதிப்பிடப்பட்டும் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டு விலைமனுக் கோரல் மூலம் 1,901,001 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அம்மதிப்பீட்டு அறிக்கையில் விலையாக 1,900,000 ரூபாவிற்கு கூடுதலான விலை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 4.5 நோக்கங்களிற்கு முரணான செலவினம்

சபையின் ஊழியர்களால் நிறுவப்பட்டுள்ள விளையாட்டுக் கழகத்தினால் அவ் அங்கத்தவர்களின் நலன்புரிக்காக பலட்டுப்பான பிரதேசத்தில் விடுமுறை விடுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு தேவையான நிதித் தேவைக்காக 2,000,000 ரூபா கடன்தொகை பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் வழங்கப்பட்டுள்ளதுடன் அக்கடனிற்கான அவ்வேளையின் சந்தையில் நிலவிய 10% வட்டிவீதத்தில் வருடாந்த வட்டியுடன் இம்மொத்தக் கடன் தவணை முறையில் அறவிடப்படுகின்றது.

### 4.6 அனுமதியற்ற கொடுக்கல்வாங்கல்கள்

சபையின் ஊழியர்கள் சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகள் கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்ட ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். அதனால் இதன் மேற்பார்வைக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மேலதிகக் கொடுப்பனவு வழங்குதல் மற்றும் அரச விடுமுறை தினங்களிலும் மேலதிகக் கொடுப்பனவு வழங்குவது தொடர்பான வீதம் அச்சட்ட ஒழுங்குவிதிகளிற்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது.

### 4.7 வேறு அரச நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்

பீபீ–1089 இலக்கமுயை கெப்ரக வாகனமானது ஜனாதிபதி செயலகத்தினால் 2012 செப்டம்பர் மாதத்தில் மீண்டும் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2012 ஜனவரி மற்றும் செப்டம்பர் மாதங்களில் அவ்வாகனத் திருத்தத்திற்காகவும் பராமரிப்பிற்குமாகவும் இத்தொகையானது செலவழிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாகனத் திருத்தத்திற்கான மொத்தச் செலவும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

### 4.8 ஊழியர் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு தொடர்பாக நிதியம் ஒன்றை நிறுவுதல்

புதிய கணக்கீட்டு நியமங்களிற்கமைய (LKAS and SLFRS) ஊழியர் பணிக்கொடைக்கான சபையின் பொறுப்பு

அத்தாட்சிப்படுத்தப்பட்ட பதிவு மதிப்பீட்டாளரால் (Certified Acturial Valuer) மதிப்பிடப்பட்டுள்ளதுடன் அப்பொறுப்பிற்கு ஒரே விகித அளவில் திறைசேரி பிணைப் பொறுப்பாக ஒதுக்கப்பட்டுள்ளது.

### 4.9 வாகனப் பாவனை

மீளாய்வாண்டிலே ஏற்பட்டுள்ள விபத்திற்குட்பட்டுள்ள சகல வாகனங்களிற்காக அறவிடப்பட வேண்டிய பணம் உரிய காப்புறுதி நிறுவனம் மூலமாக அறவிடப்பட்டுள்ளது. கணக்காய்வு விசாரணையிலே குறிப்பிட்டுள்ள விடயத்திற்கு காலப்பகுதி மாற்றமே (Timing Difference) காரணமாகவுள்ளது.

## 5 கணக்கியல் செயற்பாடு மற்றும் சிறந்த நிர்வாகம்

### 5.1 கொள்முதல் விலைமனுத் திட்டம்

சபையின் தலைமை அலுவலகத்தினதும் மற்றும் சகல பிரதேச அலுவலகங்களினதும் விஸ்தரிப்பு செய்தலை ஆய்வு செய்த பின்னர் அடுத்த வருடத்தில் கொள்முதல் விலைமனுத்திட்டம் தயாரிக்கப்பட உள்ளது. அவ்வாறாயினும் சபையின் நிதி ஒதுக்கீடு அங்கத்தவ சேவைச் செயற்பாடுகள் மற்றும் முதலீடுகளிற்கு முன்னுரிமை அளிக்கு முகமாக வருடத்தின் மதிப்பீடு செய்ததுடன் எல்லாக் கொள்வனவுச் செயற்பாடுகளிற்காகவும் நிதிச் செலவினம் செய்யப்படவில்லை. சபையால் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளிற்காக முன்னுரிமை அளித்து கொள்வனவு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக சில கொள்வனவு விலைமனுக்கள் எதிர்வரும் வருடங்களிற்காக மாற்றப்பட நேரிடும். அதன்படி இம்மாதிரியான ஆரோக்கியமான மாறுபாடுகளிலிருந்து சபையின் சிறப்புமிக்க செலவின நிர்வாகம் தெளிவாகின்றது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கீழே தரப்பட்டுள்ள கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- சாதாரண மீளளிப்புக் கோரல் விண்ணப்பப் படிவங்களைப் பரிசீலித்தல்
- விசேட மீளளிப்புக் கோரல் விண்ணப்பப் படிவங்களைப் பரிசீலித்தல்
- ஐந்தாம் தர, உயர்தர புலைமைப் பரிசில் விண்ணப்பப் படிவங்களைப் பரிசீலித்தல்
- வியன வீட்டுக்கடன் மற்றும் அலுவலகப் பணியாளர்களின் வீட்டுக்கடன் மற்றும் முதலீட்டு வங்கிக்கான நிதியினை விடுவித்தல்
- அலுவலகப் பணியாளர்களின் மருத்துவ மீளளிப்புப் பற்றுச்சீட்டுக்களைப் பரிசீலித்தல்
- வருடாந்த மிகையூதியக் கொடுப்பனவு மற்றும் அலுவலகப் பணியாளர்களின் விடுமுறை பற்றிய பரிசீலனை
- எஞ்சியுள்ள வருடாந்த விடுமுறைகள் பற்றிய பரிசீலனை
- சேவையிலிருந்து இளைப்பாறும்போது செலுத்த வேண்டிய பணம் பற்றிய பரிசீலனை

மேலும் பிரதேச அலுவலகக் கணக்காய்வு ஆனது சபையின் பங்களிப்பு மற்றும் காசேட்டுப் பரிசீலனை, அங்கத்தவர் கணக்கினை தரவேற்றம் செய்தல், முதலீட்டு வருடாந்த பொருள் மதிப்பீடு, பௌதீக வளங்களின் பரிசீலனை, முடிவடைகிற கணக்குகளின் பரிசீலனை, பங்களிப்பு பயன்பாட்டு நிதியைத் தீர்மானித்தல், பங்கு இலாபம் மற்றும் வட்டிக் கணிப்பீடு, சாதாரண கணக்குக் கூற்றுத் தயாரித்தல் போன்ற கணக்காய்வு 2012ஆம் ஆண்டில் நேர்த்தியாக மேற்கொள்ளப்பட்டதுடன் சகல கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2012ஆம் ஆண்டிலே அனுகூல வருமான உழைப்பு வழிமுறை மூலம் சபையின் வரவுசெலவுவித்தியாச வருமானம் 7.6% இல் அதிகரிக்கப்படுவதற்கு முடிந்ததுடன் செயற்பாட்டு மொத்தச் செலவு வித்தியாசம் 0.6%இல் பேணப்படுவதற்கு முடிந்துள்ளது. அதுபோல சபையின் நிகர இலாபத்தின் வரவுசெலவு வித்தியாசத்தில் 3.9% இலாபத்தைப் பேணக்கூடியதாகவிருந்தது. அதன்படி சபையினால் சிறந்ததொரு வரவு செலவுப் பேரேடு கட்டுப்பாடாக பேணப்பட்டுள்ளதென்பது எமது முடிபாகும்.

## 6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

2012ஆம் ஆண்டிலிருந்து சபையின் கணக்குக் கூற்றானது இலங்கை நிதிககூற்று அறிக்கை நியமங்களிற்கமையும் முறையில் தயாரிக்கப்பதற்கு இயலுமாகவுள்ளது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைச் சட்டத்திற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்களிற்காக தேசியத் தொழில் ஆலோசனைச் சபையின் உடன்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்வரும் செயற்பாடுகளிற்காக நிதி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்: **கே. எம். ஏ. கொடவத்த**
தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை